# ST. DAVID'S HIGH SCHOOL,

(FORMERLY S. P. G. HIGH SCHOOL)

**Founded 1717.**

# MAGAZINE

**CUDDALORE O. T.**




CONNEMARA
10 DEC 1955
MADRAS

SERVICE & SACRIFICE

**MARCH 1954.**

10 DEC 1955

# பொருளடக்கம்


1. " தமிழ்த் தொண்டு " — பா. இராசாராம்
2. " வாழ்க்கையின் நோக்கம் " — க. முனியப்பன்
3. " பெரியோர்களின் பேருரைகள் " — ப. இராமலிங்கம்
4. " பாழ் மண்டபம் " — K. திருநாவுக்கரசு
5. " பரிசு " — கு. வேணுகோபால்
6. " வெண்ணிலா " — குணு
7. " விஞ்ஞான உலகம் " — சே. ந. சேக்யூசுப்
8. " படிப்பின் பயன் " — பத்மா
9. " பிராணிகளின் வயது " — சி. தண்டபாணி
10. " விஞ்ஞானப் புரட்சி " — கு. லோகநாதன்
11. " உபாத்தியாயர்களும் கிராம சீர்திருத்தங்களும் " — எட்வின் சாமுவேல்
12. " அதிசயம் ஆனால் உண்மை " — சி. தண்டபாணி
13. " சிறுபட்டி " — வித்துவான் ந. தண்டபாணி
14. திருவள்ளுவர் மாணவர் தமிழ் இலக்கிய மன்றம் ஆண்டு அறிக்கை 1953–54
15. தூய தாவீது சாரணர்ப் படை

10 DEC 1953

# UNITED NATIONS DAY IN SCHOOLS

## PEACE, JUSTICE, PROGRESS.

Eight years ago to-day marked the beginning of a great challenge. To be sure, neither the act of signing the Charter on 26th June 1945, nor its ratification on 24th October of that same year changed the world. No actions such as these could, of themselves, clear away the fears and tensions that oppress the nations or dissipate the miseries that two world wars have brought upon mankind. Conflict and the reasons for conflict do not disappear overnight. Peace, Justice and Progress are the fruits of long years of patient effort. That is the challenge.

It is very true, however that the birthday of the United Nations ushered in a new opportunity for all of us. The Charter of the United Nations is a pledge to live up to a number of high ideals, but it is also the blue print after which the organs of the United Nations were fashioned. It sets forth the means to fulfill the pledge. Now, as the United Nations enters its ninth year and we look back upon its brief but active life, what do we see? How well has this pledge been kept and the challenge met?

*Peace :*

Peace is not only the absence of war; it is a positive though complex state of living. The means must be available to solve the inevitable conflicts of interest that arise between nations without resource to force, and the will to do so must be present. Men must

regard and treat one another as equals and admit each man's and each nation's rights. Their sense of justice must overcome their self-concern. They must be willing to co-operate to help one another to improve their common standards of living and thus give all the opportunity for a better life.

The United Nations offers the means to achieve all these things but, when fighting has broken out, it must first be stopped. In the past when a dispute between nations reached the point the where diplomacy had failed and fighting had begun, there was no way left to reopen the talks that might lead to a sensible solution. There was nothing left to do but to fight it out. But out, with the United Nations, a new dimension was added. For, through it, the diplomats of the warring nations are brought face to face once more to talk to one another with the eyes of the world upon them and the advice and suggestions of other nations ringing in their ears. The fighting is stopped and reason has an opportunity to be heard.

This was true in Indonesia; Palestine, and Kashmir and, in somewhat different ways, in the Balkans and at the time of the Berlin blockade. In all of these cases the United Nations sought a peaceful settlement of the conflict. Had the machinery of the United Nations not existed, each conflict might have taken a very different and a very serious course.

Merely to stop a fight does not of course, solve the problems that caused the fight to start. For, when a dispute is deep enough to lead to war, no quick or easy solution is apt to be at hand. Much always remains to be done. The tempers that flared into war must first be calmed down and often protracted negotiations car-

ried on before any agreement can be reached. But that is what the United Nations is for. If its machinery is used and good will exists, peaceful solutions can be found.

The nature of the war in Korea was different from the above-mentioned examples. It did not represent a failure of diplomacy. It was a planned act of aggression. But the framers of the United Nations Charter knew that there would always be elements of society which would try to destroy the peace which the rest of the world so earnestly wanted. Therefore, they gave the United Nation's the right to resist aggression. So, when the attack on South Korea started, we entered a new phase of history. For the first time, a group of nations took up arms to resist attack on one of their neighbours instead of waiting to be destroyed singly and alone. This act may well shape the future for man. Now that an armistice in Korea has been attained and the military phase is over, the task facing the United Nations is to find peaceful ways of settling the problems that caused the war as well as the multitude of new problems which the long course of the war has brought into being. This is no easy task. It will require much wisdom, much patience and much determination that right and justice prevail. Anger and vindictiveness have none but a destructive role to play in the future.

High on the priority list of things to be done immediately is the reconstruction of war torn Korea and the rehabilitation of its people. The United Nations has long foreseen this and has matured plans to accomplish it.

*Justice:*

Justice, in the broad sense, is the right dealing of men with one another. It is to do to another as you would have him do to you. Without this there can be no Peace, no Progress. Throughout history intolerance of other men's actions or views and discrimination against individuals and groups because they are "different", even mass extermination of such "different" groups, have destroyed man's relations with his fellow men even as a cancer destroys healthy tissue.

The United Nations has a positive way of striving for justice. It has resettled more than a million refugees—the victims of injustice and given them a chance for new and productive lives. It has branded genocide, the mass extermination of groups of people for any reason, a crime against humanity and made it punishable as such. Through the Universal Declaration of Human Rights, it has proclaimed the right of women. Through the Trusteeship system, with the co-operation of the Administering Powers, it promotes the welfare of twenty million people in the Trust Territories. Its concern for the welfare of all non-self-governing peoples constitutes a joint effort to apply justice to all.

When nations deal with one another, they make agreements or sign treaties which regulate their trade, the treatment of their nations travelling in other lands, the safety of their ships and airplanes, and many other matters. Both governments and private citizens of many countries who have like interests, set up organizations through which they can promote those common interests, pool their knowledge and increase the effectiveness of whatever task they have undertaken.

This vast and growing co-operative effort develops customs which are finally regulated by mutual agreement and accepted by peoples as the proper way to treat one another. This is the basis of international law which is adhered to by nations of good will because it is regarded as right and just, not because power says it must be so.

The United Nations seeks to codify these international agreements and to help develop them so that international law and justice can replace armed conflict as a means of settling disputes. It established the International Court of Justice to judge cases arising from disagreements between States and to give advisory opinions on matters of interest to the United Nations at the request of the General Assembly and the Security Council or to any other organ of the United Nations or a Specialized Agency when so authorized by the General Assembly.

This search for justice for all men and all nations is a necessary part of the work of the United Nations. Without it there can be no Peace, nor can there be any firm basis for Progress.

*Progress.*

We live among the first generation of men which has dared to believe that the resources of the earth can be shared by all for the benefit of all and that the miseries that afflict two-thirds of mankind are not inevitable.

The Economic and Social Council of the United Nations and its commissions, the United Nations International Children's Emergency Fund, the various Specialised Agencies, the Technical Assistance Administration of the United Nations, working in close co-operation

with many of these Agencies, have all been set up to fight disease, starvation, malnutrition, ignorance and the lack of opportunity for education, bad labour, living and social conditions, and a host of other disabilities that affiict the majority of mankind. These are literally the shock troups of the United Nations which are dispersed throughout the world working on problems down at the project level.

What does this mean? The answer is in benefits conferred. It is too long to give here in full but, among other things it means: new social security systens for the peoples of many countries, villages in Afganistan rid of typhus fever, a disease of the Caracul sheep in that country stopped and consequently many more and better skins for export, it means a child cured of a murderous tropical illness by one shot of penicillin, Greek villagers freed from Malaria so that they can put new strength and new hope into their work and still have enough of each left over to work together on village improvements during their off-hours. It also means a hoe and a scythe in the hands of a farmer who has never before used either one, but which enable him to more than double his production, a new and better weaving in Philippine cottages, the near doubling of the production of an iron foundry in Pakistan, fundamental education centres for the illiterate two-thirds of the world, which teach them to deal, more wisely with their environment, food and medicine and care for needy children and learning how to stop the vast wastage of stored foods in all parts of the world.

It has other meanings also, such as new hydro-electric plans in Mexico El Salvador, Chile and Brazil, generating power for mines, mills, factories, city lighting and telephones; or new international standards of

work and safety for seamen, now operative on most ships, and uniform regulations for planes plying the trade routes of the world. It means improvement of the forest resources of Mexico, a better fishing industry in Chile, a study of the social, economic and technical problems confronting the Government of El Salvador, improved food production, handicrafts, rural co-operative housing and education in that country, as well as erosion control and irrigation of parched lands throughout the world.

The benefits accrue to developed and to underdeveloped countries alike. Rising standards of living resulting from the opening up of new resources, improved health and consequent greater production will mean better labour standards and higher pay. The reduction of sweated labour and increased pay for workers in presently poor countries will protect the higher standards in the more favoured lands while it hastens the equalization of all.

The United Nations deals with man's problems on all fronts. It is organized to resist aggression, to stop fighting and solve problems peacefully. It seeks to establish just dealings among men as the only possible basis for peace. It strives to promote better standards of life in larger freedom.

Neither Peace, Justice nor progress can endure separately. They complement one another, They are parts of the whole which the United Nations is striving to accomplish.

# EXCURSION TO GINGEE.

The major excursion of our class for this year was to Gingee on 27-11-53. The party consisted of my class of 35 pupils, class teacher, and some other teachers. The students were divided in groups. Each group was placed in charge of a teacher. On 20-11-53 I gave a preliminary talk to the pupils about historical importance of Gingee with special reference to the stirring episode of Raja Desing and the various monuments worth seeing there.

At 8-15 P. M. on 27-11-53 the Party assembled at the Nadar Hall. The teacher in charge of the class marched the students to the railway station. We boarded the Madura Parcel Passenger at Cuddalore O. T. at 8-45 P. M. We reached Villupuram at about 11 P. M. The buses were ready at the railway station and took us to the Board High School at Gingee where we took rest till day break.

After breakfast we marched to the Rajagiri through the Pondicherry Gate. On the way we saw the huge rampart and the moat enclosing the chief hills the Chandrayan, and the Durgam. We saw the Bala-ranganathar Temple, Venkatarama Swamy Temple and Sadatullakhan's Mosque. Getting up the Rajagiri we saw the Kamalakkanne Amman Temple and many huge honey combs hanging from the precipice. Reaching the summit of the citadel by a wooden bridge over a deep and natural chasm and after passing through seven gates we saw two granaries, the Ranganathar Temple, the clock tower, a big cannon and three springs of clear water.

We then got down and saw at the foot of the hill three big granaries, the Gymnasium Hall, the Anaikulam Mandapam, the Elephant stables, the Chakrakulam, the Chettykulam, the Platform where Design's body said to have been cremated and a large stone image of Hanuman. We also saw long rows of horse stables, two slabs of polished stone which served as bathing platforms for Raja Desing and his queen and last but not the least the Kalyana Mahal with a square tower of eight storeys, which is the finest of all the monuments of the place. Returning to the School we had our dinner and took rest for some time.

After lunch at 9-30 A.M. we started for Krishnagiri by the Tiruvannamalai Road. Climbing the steep steps of the hill with difficulty we reached the top and saw two granaries, a shrine to Ranganatha and the Kalyana Mandapam. At about 6-30 P. M. we returned to the School. Thus the busy day closed. How we wished we had some more time before sun set to go to the rock - cut shrine at Singavaram and worship Lord Ranganatha, Raja Desing's titular deity, who is said to have refused to permit him to go to the battle and miraculously turned his face aside as a mark of his disapproval of the devotee's headstrong haste.

After supper at Gingee we reached Villupuram railway station by bus and stayed on the platform till the arrival of the Trivandrum Passenger. A carriage was placed at our disposal and we all reached Cuddalore O. T. safely at 3-45 A. M The pupils were then taken to the heart of the town and sent home.

R. VENKATACHALAM,
IV Form A. S.

# THE OLD CAT.

An old woman had a cat. The cat was very old; she could not run quickly, and she could not bite, because she was so old. One day the old cat saw a mouse; she jumped and caught the mouse. But she could not bite it; so the mouse got out of her mouth and ran away. Then the old woman became very angry because the cat had not killed the mouse. She began to hit the cat. The cat said, "Do not hit your old servant. I have worked for you for many years, and I would work for you still, but I am too old. Do not be unkind to the old, but remember what good work the old did when they were young".

K. JAGANNATHAN,
V Form B.



# REPORT FOR THE YEAR 1952-1953.

Nothing spectacular to report except for the slight improvement in the accommodation because of the purchase of a building almost opposite to the school at a cost of Rs. 4,000/-. The front view of the annexed building appears elsewhere.

Staff retreat was held on August 29, 1953 in the Fort St. David Bungalow for the benefit of the Christian members of both the High and Elementary Schools. It was conducted by the Rev. D. G. Tucker and it was attended by the teachers of other C. S. I. Schools in the Cuddalore pastorate.

Fifty four pupils were sent up for the S.S.L.C. Examination in March 1953 and thirty four came out successful. For the first time in the history of the institution the South Arcot District Inter School Games Tournaments were conducted by this school in October 1952. In this connexion I should like to express my thanks to all the members of the staff who spared no pains to make it successful. Our boys won the Volley Ball shield. A. Balakrishnan, our school pupil leader represented this district at the Inter District Sports meet at Tirupathi in February 1953.

There were only a few changes in the staff. The Annamalai University has instituted B. T. course also, and we hope we will be able to man the High School classes with trained graduates in the years to come.

G. M. ARUMAINAYAGAM,
*Headmaster.*

# தமிழ்த் தொண்டு

1. நல்லதொரு தொண்டு செய்வாய் தமிழா! வாழ்வில்
நலமற்றார்தமிழர் என இகழ்ந்தார் தம்மை
வெல்ல ஒரு தொண்டு செய்க; தமிழே இந்த
வையத்தின் முழுநிலவாய் விளக்கும் போது
தொல்லைதரும் பகைமையெலாம் தூள்தூள் செய்க
துறைதோறும் தமிழ்வளர்ச்சி தடுக்கின்றாரின்
சல்லிவேர் கல்லுவதே கடமையாகும்
சலிப்பதிலே காட்டுதல் உம் சாக்கொடென்பேன்

2. வீண்பெருமை பேசுவதில் பலனே இல்லை
வெளிநாட்டார் உன் தமிழை அறிகின்றாரா?
மாண்புடைய மொழிஎன்று தமிழ் விளக்கை
மட்குடத்துள் மூடிவையேல்; உலகமெல்லாம்
காண்பதற்கே குன்றிலிட்டு தமிழின் தூய்மை
காட்டிடவும் வேண்டுமடா தமிழா! உன்றன்
ஆண்மையினை அறத்துறையை உலகிற்கெல்லாம்
அறிவுறுத்த அறிவுலகில் தலைமைகொள்வாய்!


3. அக்காலத் தமிழ்ப்புலவர் நெஞ்சி லெல்லாம்
அமுதமென ஊற்றெடுத்துக் கவிதைஓடை
எக்கால வாழ்விற்கும் உண்ணீர்தந்து
எழில்சங்கச் சுவடிகளாய் இருத்தல் காண்பாய்!
முக்காலப் பயன்பொருளாய் இலக்கியங்கள்
அமைவதற்கு இலக்கணந்தான் அமையவேண்டும்!
இக்காலத் தமிழ்வளர்ச்சி இலக்கணத்தை
இடிப்பொடித்துப் போடுவதோ? உணரவேண்டும்!

பா. இராசாராம்,
பழைய மாணவன்

10 DEC 1955



ST. DAVID'S HIGH SCHOOL
ANNEXE (1953)



SCHOOL SCOUTS

13

# வாழ்க்கையின் நோக்கம்

---

உலகில் வாழும் உயிர்வாழ்வனயாவும் தத்தம் கருத்தை நாடியே வாழ்வை நடத்துகின்றன. ஆறு அறிவு படைத்த மனிதனை எடுத்துக்கொண்டால், ஒருவர் கல்வியில் நிபுணராக வேண்டும் என்றும், மற்ருருவர் இசையில் வல்லவராக வேண்டும் என்றும், மற்ருருவர் சித்திர வேலைப்பாட்டில் சிறந்து விளங்க வேண்டும் என்றும், அவர் அவர் எண்ணத்திற் கேற்ப நோக்கம் கொண்டிருப்பர்.

பறவைகளும், விலங்குகளும் தத்தம் எண்ணத்தின்படி நோக்கம் கொண்டிருக்கும். ஒவ்வொரு மக்களுக்கும் வாழ்க்கை யில்லை நோக்கம் இல்லையானல் வாழ்வு ஒழுங்குபடாது "விழலுக்கிறைத்த நீரைப்போல", வாழ்வும், உழைப்பும் வீணே கழியும்.

மனிதன் மனதில் எண்ணும் நோக்கத்திற்கும், ஜீவராசிகள் எண்ணுகின்ற நோக்கத்திற்கும், வேற்றுமை உண்டு. மனிதன் நோக்கத்தை நிறைவேற்ற பாடுபடுவான். மனிதனுக்கு இயற்கை அறிவும், சேர்க்கை அறிவும், கல்வி அறிவும் துணை புரியும். மற்ற ஜீவராசிகள் அதன் நோக்கத்தை நிறைவேற்ற பாடுபடாது. இந்த அறிவும் கிடையாது. "தாம் இன்புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என திருவள்ளுவர் கூறுகிருர். தாம் இன்புற்றிருக்கும்போது இவ்வுலக மக்களும் இன்புற்றிருக்கவேண்டும்.

நம் வாழ்க்கையில் பொய்பேசாது உண்மையே பேச வேண்டும். இது நம் நோக்கத்தை நிறைவேற்றும் வழிகளில் ஒன்று. ஒரு புலவர் வறுமையால் வாடிவரும்போது ஒரு பொய் கூறுவாராயின் அவர் வறுமை நீங்கி இன்பவாழ்க்கை எய்துவார், அப்பொழுதுகூட அவர் பாடிய பாடல் :—

" வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன்; மெய்கூறுவல் "

என்கிருர் (மருதனிள நாகனுர்). பழந்தமிழ்ப் புலவர்கள் மானமே பெரிதாக வாழ்ந்தவர்கள். பழிச்செயல் செய்ய விரும்ப

மாட்டார்கள். செய்நன்றியையும், திருப்திகரத்தையும் உடையவர்கள். புத்தரும் நல்ல உபதேசத்தை போதித்துள்ளார். "யான் பெற்ற 'இன்பம் பெறுக இவ்வையகம்" என்கிறார். பிறப்பால் உயர்வு, தாழ்வு இல்லை. பிறருக்கு நன்மைபுரிபவர் தான் உயர்குலத்தினர் என்கிறார் புத்தர்.

ஒவ்வொருவர் நோக்கமும், சுயநலம் கருதாது பொதுநலத்திற்காகவே வாழ்வதாக அமையவேண்டும் பிறர் நன்மைக்காக பாடுபடுவதே " பிறர் நலம் " இவ்வுலகில் துன்பத்தைப் போக்கி இன்பத்தை அளிப்பது "அன்பு" ஒன்றே ஆகும் அன்பு என்றும் அழியாத அமரத்துவம் உடையசெல்வம் சாதி உயர்வு, தாழ்வு நம்மை பிடித்துள்ள பெருநோய். இந்நோய் இடையிலே பெற்றநோய். "எல்லோரும் ஓர் குலம்" "எல்லோரும் ஓர் இனம் " என்ற எண்ணம் வேண்டும். ஒவ்வொருவரும் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே சிறந்த நோக்கம். கல்வி வசதியும், பொருள் வசதியும் உடையவர்கள் கல்லாதவருக்கும் வறுமை உற்றவர்களுக்கும் உதவியளிக்கவேண்டும்.

நாம் நல்லகாரியங்களை செய்ய முடியாவிட்டாலும் தீமையான காரியங்களைச் செய்யாது விட்டொழிக்க வேண்டும் என நரிவெரூஉத்தலையார் கூறுகிறார். ஒவ்வொருவரும் ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும். ஒழுக்கமே தலைசிறந்தது என்கிறார்கள் பெரியவர்கள். உடல் வலியும், அறிவுத்திறமையும் இருந்தால் மட்டும் போதாது ஒழுக்கமும் மக்கட்பண்பும் ஒருங்கே பொருந்தி அமையவேண்டும்.

" அரம்போலுங் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட்பண்பில்லாதவர் "

என்கிறார் வள்ளுவர். கல்வியின் நோக்கம் மக்கட் பண்பை பெறுவதே. மக்கட் பண்பு என்பது பிறர்நோயை தன்நோய் போல் கருதுவதாகும். மக்கள் துன்பத்தை தன்துன்பமாக எவன் கருதுகிறானோ அவனே கல்விமான் என்கின்றனர். மக்கள் செல்வத்தை வெளிமயக்கத்திற்கோ, வீண்பெருமைக்கோ, ஏராளமாக செலவிடுகிறார்கள். அவற்றைத்தடுத்து தூயவாழ்க்கை வாழ வழிதேடுவோமாக! தனி உணர்ச்சி


குறைந்து, சமூக உணர்ச்சி வளர, வளரத்தான் நம்துன்பங்கள் தொலையும் என்கிறார் ஒரு மூதாதை. இளைஞர்களாகிய நாம் பிஞ்சிற்பழுக்க வேண்டாம். இளம் பருவத்திலே நம்மை மயக்கக் கூடியன பற்பல என்கிறார்கள் கவிப்புலவர்கள்.

> “எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு”

என்பதை மனத்திற் கொண்டு கல்வியிலே முழு கவனத்தையும் செலுத்தவேண்டும் என்கிறார் வள்ளுவர். அகப்பகைவர், புறப்பகைவர் என இருவகை பகைவர்.

அகப்பகைவர்களாகிய கண், காது, மூக்கு, செவி, மெய், ஐம்புலன்களையும் அடக்கி வென்றால் தத்தம் வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். ஒவ்வொரு நூல்களையும் தெளிவாகக்கற்று வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவுபடுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தற்புகழ்ச்சி, பிறர்நிந்தை, அயலார் குற்றம் நாடுதல் இம்மூன்றிலும் விலகிநிற்கவேண்டும். ஒவ்வொருவரும் சத்தியம், அஹிம்சை, தேசமுன்னேற்றம் இம்மூன்றையும் நிலைநாட்டவேண்டும். ஒவ்வொருவரும் மேற்கூறிய பொதுநோக்கத்தை நிறை படுத்துவதையே நம் வாழ்க்கையின் நன் நோக்கமாகக் கொள்வோமாக.

க. முனியப்பன், ஐந்தாம்படிவம்.



10 DEC 1955



# பெரியோர்களின் பேருரைகள்

1 மதம் மக்களுக்கு அபின் போன்றது — மார்க்ஸிம் கார்க்கி.

2 பசியுடன் வாடுகிறவர்கட்கு அரசியல் சுதந்திரம் திருப்தி அளிக்காது — லெனின்.

3 இயற்கையைத் துருவி ஆராயவே மனிதன் பிறந்தான் கண்மூடிக்கிடக்க அல்ல — ஸ்டாலின்.

4 சரியான ஊழியமே பரிபூரண சுதந்திரம் — இரங்கின்.

5 இருதயம் கெடுதலாய் இருப்பவர்களிடம் புத்தியும் பலவீனத்தை அடைந்து விடுகிறது — ஆலிவர் கோல்ட் ஸ்மித்.

6 சிலகாலம் எல்லோரையும் ஏமாற்றலாம். சிலரை எல்லாக் காலமும் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது.

— ஆபிரகாம்லிங்கன்.

7 உன் துபசிகளை அடக்கிக்கொண்டு விட்டால், மனித சுபாவத்தையே வெற்றி கண்ட மாதிரி.

— சார்லஸ் டிக்கன்ஸ்.

8 உலகிலேயே மிகசீர்திருத்தக்காரன் தன்னை சீர்திருத்திக் கொள்பவனே — பெர்னாட்ஷா.

9 மலர்களைச் சுற்றி மணம் கமழும். அதுபோலத்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து புகழ் திகழும்.

— சாக்ரெடீஸ்.

10 வீண் சொற்கள் விஷயத்தைப் பழுதாக்குகின்றன.

— ஆண்ட்ரூஸ்.

11 ஒரு மனிதனைப்பற்றி சரிவரத் தெரிந்துக்கொள்ள வேண்டுமானால் அவன் என்ன சொல்லுகிறான் என்பதைவிட, என்னக் கேள்விகள் கேட்கிறான் என்பதைக் கவனிக்க வேண்டும். — வால்ட்டேர்.

12 துன்பத்தைப் பொறுக்கக் கூடியவனால்தான் எந்த செயலையும் நன்கு செய்ய முடியும் — மில்டன்.

13 ஒருவனின் பொய்ப்பேச்சைக் காட்டிலும், அவனது எண்ணம் அதிகமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.
— ஷேக்ஸ்பியர்.

14 கொதிக்கும் மனமே மனிதனின் மிகப்பெரிய ஆயுதம்
— மார்ஷல் போக்.

15 சிந்தித்துப்பார்க்காமல் பேசுவது, திரும்பிப்பார்க்காமல் சுடுவதைப் போன்றது.
— காஸ்லிட்.

16 இந்த உலகத்தில் கெட்டவர்கள் இன்பம் அனுபவிக்கிறார்கள். நல்லவர்கள் துன்பம் அனுபவிக்கிறார்கள்.
— முல்க்ராஜ் ஆனந்த்.

17 உடலில் ஓடும் உதிரத்தில், வடிந்தொழுகும் கண்ணீரில் தேடிப்பார்த்தாலும் ஜாதி தெரிவதில்லை. எனவே உலகில் உயர்குணம் என சொல்லிக்கொள்வது சரியன்று.
— புத்தர்.

18 எல்லாப் பொருள்கட்கும் மேலாக இதயத்தைக் காத்துக் கொள்வாய். ஜீவகுணம் அதிலே தோன்றும்.
— இயேசு நாதர்.

19 வீரன் கைவாளின் வலிமையைவிட அறிஞர் கையெழுதுகோலின் வலிமை மேன்மையானது
— நபிகள் நாயகம்.

20 கண்மூடிப்பழக்க மெல்லாம் மண்மூடிப்போக வேண்டும்.
— இராமலிங்க அடிகள்.

21 உழைப்பின்றி உண்பவர்களைத் திருடர் என்றுதான் அழைக்கவேண்டும்.
— காந்தி.

22 சிறிய விஷயத்தையும் யோசித்துப் பேசு
— ஜின்னா.

23 உலகம் ஓர் உடற்பயிற்சி சாலை. அதில் நம்மை பலசாலியாக்கிக் கொள்ளவே நாம் வந்திருக்கிறோம்.
— சுவாமி விவேகானந்தர்

24 குரலுக்கு இசைந்தது தாய் மொழியே அந்நியர் மொழியல்ல
— இராஜாஜி.

25 நெருப்பு சுடாமல் குளிர்ச்சியாக மாறலாம் ஆனால் பதவியில் அமர்ந்தவர்கள் மட்டும் பெரும்பாலும் யோக்கியனாக இருக்கமுடியாது.
— பெரியார்.

26 மானைத்தின்று புலி கொழுப்பதைப் போலத்தான், ஏழையின் உழைப்பையே உறிஞ்சி முதலாளித்துவம் கொழுக்கிறது — அறிஞர் அண்ணா.

27 நல்லகுடும்பம் ஒரு பல்கலைக் கழகம் — பாரதி தாஸன்

28 இளைஞர் உள்ளங்களில் எண்ணங்கள் சும்மா இருப்பதில்லை செயல் வடிவம் பெறவே விரும்புகிறது.

— டாக்டர் மு. வரதராசனுர்

29 பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புனிதமேனி வளர்த்திடும் ஈசன் மண்ணுக்குள்ளே சிலமூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்கள் — மகாகவி பாரதியார்.

30 தரித்திரத்தைத் துரத்த வேண்டுமானல் தற்குறித்தனத்தைத் தொலைக்க வேண்டும். — அறிஞர் அண்ணா.

தொகுப்பு ப. இராமலிங்கம் ஆரும்படிவம்.

★


# அன்பர்களே!

**இன்றே வாருங்கள் !** **இன்றே வாருங்கள் !!**

நல்ல கெட்டிச்சாயம், பளபளப்பு மிக்கது. கண்கவர் வனப்புடன் பன்னாள் உழைப்புடையது, பன்னிறப் பூக்கள் நிறை நாகரீக உடைகள், உயர்ந்த சரிகை பட்டாடைகள், சேலைகள் முதலிய யாவும் எங்கள் **பாடலி அன் கோவில்** கிடைக்கும்.

✱

ஒருமுறை வருவீர்களேயானல் பன்முறையும் தாங்களே விஜயம் செய்வீர்கள்!

✱

**இன்னகையோடு** **இன்றேபெறுவீர்**

## ✱ பாடலி & கோ., ✱

**லாரன்ஸ் ரோட் : : திருப்பாதிரிப்புலியூர்**

# பாழ் மண்டபம்.

இருள் ! எங்கும் இருள் ! ஒரே இருள் !! அந்த இருளிலே ஊர்ப் புறத்தேயுள்ள ஒரு பாழ் மண்டபத்தில் யாரோ இரண்டு உருவங்கள் காதுடன் [illegible]ாகப் பேசிக்கொண்டிருந்தன. முதல் உருவம் தன் கையில் இருந்த பிச்சுவாக் கத்தியை அந்த உருவத்திடம் நீட்டியது. உடனே இருவரும் பிரிந்தனர்.

மறுநாள் காலையிலே ஆற்றுக்குக் குளிக்கப்போனவர்கள் பாலத்தருகே ஒரே கூட்டமாயிருப்பதைக் கண்டனர் கிட்டே நெருங்கிப் பார்த்தால், ஆம் ! ஆனந்தா பாக்டரி ஓர்க்ஸின் சொந்தக்காரர், ராமாநந்த நாடார் "நேற்று சாயந்திரம்கூட கோயிலிலே பார்த்தோமே" என்று கூட்டத்திலே ஒருவர் உரக்கச் சொன்னார். இதற்குள் போலீஸ் வந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஏதோ குறிப்பெடுத்தார்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ் வேன் வந்தது. பிணத்தைத் தூக்கி வண்டியிலே போட்டுக்கொண்டு போய்விட்டார்கள்.

டாக்டர் பிரேதப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு விஷக்கத்தி உடம்பிலே பாய்ச்சப்பட்டிருக்கிறது. அதவும் சம்பவம் 24 மணி நேரத்திற்குள்ளாகத்தான் நடந்திருக்க வேண்டுமென்று தம்முடைய பரிசோதனையின் முடிவை தெரிவித்து விட்டார். கத்திக்குத்து நல்ல பலசாலியான ஆள்தான் பதம் பார்த்திருக்க வேண்டும். கத்தியிலே விஷம் தோய்க்கப்பட்டிருக்கிறது. பக்கவாட்டிலே குத்த முயன்றிருக்கவேண்டும். ஆனால், திடீரென சப்தம் கேட்டுத் திரும்பியிருக்கவேண்டும் ஆனால் வந்த ஆள் அவசரத்தில் அடிவயிற்றின் கீழே குத்திவிட்டான். கத்தி சிறிதளவு பின்பக்கம் வெளிவந்து விட்டது. அவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கிறது.

கத்தியை வைத்துக்கொண்டு ஏதோ யோசனை செய்கிறார் சப்இன்ஸ்பெக்டர். எல்லோரும் தங்கள் தங்கள் காரியத்தை கவனித்துக்கொண்டிருந்தார்கள். நேரம் போகப்போக கூட்டம் கலைந்து விட்டது. இப்பொழுது ஊரே அமைதியிலே ஆழ்ந்து விட்டது. இன்னமும் சப்இன்ஸ்பெக்டர் இருந்த இடத்திலிருந்து அசையவில்லை. அந்தக்கத்தியிலே பொறிக்கப்பட்

டிருந்த எதையோ உற்று உற்று கவனித்துக்கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்கொருதடவை அவருடைய முகத்திலே ஏதோ தெளிவுகள் மேலும் மேலும் அதிகமாகிக்கொண்டே இருந்தன. இப்படி எவ்வளவு நேரம் இருந்தாரோ..........

மறுநாள் பொன்னுசாமி லாக் அப்பில் இருந்தான். நேற்றுவரை அவன் வெஜிடபிள் மார்க்கட்டில் பெயர் போன வியாபாரி. நல்ல வாட்டசாட்டமான ஆள். கருத்த கட்டையான உருவம். சுருள் சுருளாகத் திரண்ட அவனுடைய தலைமயிர் அவனுக்குத் தனி அழகைக் கொடுத்தது. இதனால்தானோ என்னவோ அந்த ஊரிலே உள்ள பெரியவைகள் எல்லாம் அவன்கடையிலேதான் வாடிக்கை. இப்பேர்ப்பட்டவன் இன்று போலீஸ் ஸ்டேஷனிலே ஆடு திருடிய கள்ளன் மாதிரி விழித்துக் கொண்டிருக்கிறானே ஏன்? எல்லாம் விதி என்பார்களே அதன் திருவிளையாடலா? இல்லை; அவன் செய்ய நினைத்த சதியின் சாஷ்டாங்க பூஜை யார் கண்டார்கள். வெகுநாளாக அவனை வெளியிலேயே காணவில்லை

ஏழு ஆண்டுகளுக்குப்பின் அதே பாழ் மண்டபத்தில் அதே மாதிரியான அமாவாசை இருட்டிலே அதே மூலையிலே அழுது கொண்டிருந்தது ஒரு உருவம். அதன் உடல் வற்றலாய் வற்றியிருந்தது. உடலிலே இரத்தம் ஓடுகிறதோ இல்லையோ என்று சந்தேகமாய் இருந்தது. எலும்புக் கூடுதான் நடமாடு கிறதோ என்றுகூட நினைக்கத் தோன்றியது. ஏன் அழுகிறது அந்த உருவம். ஏழு ஆண்டுகளுக்குமுன் நடந்ததையெல்லாம் நினைத்து நினைத்துத் தேம்பியது. இதே உருவம் ஏழு ஆண்டு களுக்குமுன் எந்த நிலையில் இருந்தது. ஆனால் இன்று அந்த உருவம் இருக்கும் நிலை என்ன? அவ்வளவையும் ஞாபக மூட்டிக் கொண்டிருந்தது அந்தப் பாழ் மண்டபம். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு அது நிலைத்து நிற்குமோ? எத்தனை கொலையாளிகளுக்கும், கொள்ளைக் கூட்டத்தாருக்கும் இடங் கொடுக்குமோ? ஆனால், என்றைக்கோ ஒரு நாள் அந்தப் பாழ் மண்டபம் பொன்னுசாமி அழிந்ததுபோல் இருந்த இடம் தெரி யாமல் தரைமட்டமாக்கப்பட்டுவிடும். அதைப்போல் அக்கிரமக் காரர்களின் வாழ்வெல்லாம் அரைநொடிதான்.

K. திருநாவுக்கரசு, மூன்றாம் படிவம்.

# பரிசு

முன்னுரை : தொன்றுதொட்டு இன்றுவரை உலகின்கண் பற்பல வகையான போட்டிப்பந்தயங்கள் பற்பல இடங்களில் நடைபெறுகின்றன. பற்பலர் அவாவுடன் போட்டிப் பந்தயங்களில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். அதாவது பல பேர்களில் முதல்வராகத் தேர்ச்சி காட்டுபவருக்குத்தான் நன்கொடை அளிக்கப்படும் என்ற ஒரு திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே விருப்புள்ளவர்கள் போட்டிப் பந்தயங்களில் பங்கு எடுத்துக்கொள்வதோடன்றியும் அப்போட்டிகளில் முதல்வராகத் தேர்ச்சி பெறவேண்டுமென்ற நோக்கோடு ஊக்கமடைகின்றனர் இவ்விதம் நம்மை நன்முயற்சிகளில் ஊக்குவிக்கும் பரிசு என்பதைப் பற்றி ஈண்டுச் சில உதாரணமுகத்தான் விளக்கியறிவோம்.

பரிசு : உலகிலுள்ளவர்கள் ஒருவனுடைய அறிவையும், முயற்சியையும் உழைப்பையும் நேர்மையையும், அரிய செயல்களையும் பாராட்டி மனமுவந்து அவனுக்கு வெகுமதியாக அளிக்கக்கூடிய நன்கொடையைப் பரிசு என்கிறோம். ஆனால் அப்பரிசு சொல்லளவில் பலரால் விரும்பிக் கொண்டாடப்படும் புகழாகவோ அல்லது செயலளவில் தகுதித் தாள்களின் வாயிலாக அளிக்கப்படும் பட்டப்பெயர்களாகவோ, சின்னங்களாகவோ பல பொருள்களாகவோ இருக்கலாம்.

பரிசின் அவசியம் : உலகிலுள்ள ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைத் தாமே புணர்ந்து அவற்றை நிறைவேற்றுதற்கு முற்படார்கள். 'குரு இல்லா வித்தை பாழ்' என்னும் முதுமொழி பொய்யாகா வண்ணம் ஒவ்வொருவரும் ஏதாவதொரு ஆசான் மூலமாகவோ அல்லது சில அறிஞர்களினுடைய அறிவுரைகளின் மூலமாகவோ தம் கடமையையுணர்ந்து புத்துணர்ச்சி பெற்று (பின்னர்) அவற்றைச் செவ்வையாகச் செய்து முடிக்க விழைவர். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்ற வள்ளுவரின் வாயுரைக்கேற்ப ஒவ்

வொருவரும் செயற்கரிய காரியங்களைச் செய்து முடிக்கும் செயல்களில் முற்படுவதற்கு, பரிசு எனப்படும் நன்கொடை தான் வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பது சாலவும் பொருந்தும். சான்றாக பள்ளிகளில் உள்ள மாணவர்கள் பள்ளிகளில் நடைபெறும் போட்டிகளிற் கலந்து கல்வியிலும் உடற் பயிற்சியிலும் (ஊக்கமும் உற்சாகமுமுற்று) முற்போக்கு அடைகின்றனர். கல்வியறிவில்லாதவனும் புதிய கவிதைகளைத் தாமே புனைவதற்கு முயற்சிக்கிறான். ஒருசிலர் அறிவியற் புதுமைகளைக் கண்டறியவல்ல ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். அன்றியும் உயர்ச்சிக்கு வேண்டிய முயற்சிக்கும், ஆக்கத்திற்கு வேண்டிய ஊக்கத்திற்கும்; பிழைப்புக்கு வேண்டிய உழைப்புக்கும் பரிசு தூண்டுகோலாயமைந்துள்ளது.

உலகில் நவக்கிரகங்களின் நிலைதிரிபில்லாமல் மிகுதியான மழைபெய்து மக்கள் சுகமாக வாழ்வதற்கு அரசனுடைய செங்கோல் நிலையின் நேர்மையே ஆதாரமாயுள்ளதாயமைந்தது போல மக்களின் சோம்பல் நிலைதிரிந்து ஊக்கமும் உழைப்பும் முயற்சியும் கைக்கொள்ளப்பட்டு ஆக்கமும் பிழைப்பும் உயர்ச்சியும் உந்தப்பெற்று நாடு நாகரிக நிலைமையை யெய்துதற்குக் காரணமாயுள்ளது பரிசு எனப்படும் நன்கொடையாகும். ஆதலின் பரிசு என்பது மிகமிக இன்றியமையாததென்பதும், சிறப்பாக பரிசு என்ற ஒரு நிலைமை எக்காலத்திலும் இருக்க வேண்டுமென்பதும் தெளிவாகிறது.

பரிசின் அவசியத்தை விளக்க உதாரணம்: குலோத்துங்கன் சோழன் காலத்திலே தமிழறிவுமிக்கவர்களெல்லாம் அவனுடைய அவைக்குச்சென்று அவன்மீது பல அழகிய கவிகளைப் பாடி அவனிடத்திலிருந்து பரிசு பெற்றுப்போவது வழக்கம். அவ்வூரிலுள்ள ஓர் விறகுதலையன் மனைவியானவள் தன் கணவனைநோக்கி "நீயும் அரசவைக்குச்சென்று அரசன்மீது கவி புனைந்து பொருள்பெற்று வரலாகாதா"? என வினவினாள். அதற்கு; தானே தனிமையாக ஒரு பாடல் இயற்றி அப்பாடலுக்குப் பொருள்கூறும் திறமையில்லாத அவன் வீதி வழியே சென்று சில பிள்ளைகள் சொல்லி விளையாடிக்கொண்டிருந்த 'மண்ணுண்ணி மாப்பிள்ளையே' என்பதையும், காகம் கரைவதைக்கேட்டு 'காவிறையே கூவிறையே' என்பதையும், எதிரில்

கோவில்பக்கமாக ஓடிய ஒரு பெருச்சாளியைப்பார்த்து 'உங்களப்பன் கோவிற் பெருச்சாளி' என்பதையும் குறித்துக்கொண்டு வரும்வழியில் ஒரு நண்பனைச் சந்தித்து அரசன்மீது பாடல் எப்படி இயற்றுவது என்று கேள்வி கேட்க, அதற்கு, நண்பன் பதிலளித்த 'கன்னு பின்னு மன்னு தென்னு' என்பதையும் குறித்துக்கொண்டுவந்து தன் பாரியாளிடம் இப்பாடலைக் காட்டியதற்கு, அவள் அப்பாடலின் இறுதியிலே சேர்க்கச்சொன்ன 'சோழங்கப் பெருமானே' என்பதையும் ஈற்றடியாகவைத்து எழுதி எடுத்துச் சென்று—

"மண்ணுண்ணி மாப்பிள்ளையே காவிறையே கூவிறையே
உங்களப்பன் கோவிற் பெருச்சாளி
கன்னு பின்னு மன்னு தென்னு
சோழங்கப் பெருமானே"

என்ற பாடலை அரசன் முன்னிலையில்பாடி அப்பாடலுக்குக் கம்பர் செய்த உரையின் காரணமாக அவன் அவ்வரசனிடம் பரிசு பெற்றான். பின்னர் அவ்விறகு தலையன் கம்பரின் கற்றுச்சொல்லிகளின் வாயிலாகத் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தமிழறிவு மிக்கவனானான்.

**பரிசினால் ஏற்படும் நன்மை :** பண்டைக்காலத்தில் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட்ட நூல்களிலுள்ள பாடல்களிலிருந்து அவ்வக்காலத்தியத் தமிழ்மக்களின் கொடை, வீரம், கல்வி, நேர்மை, ஆட்சி, வாணிபம், சமூக வாழ்க்கை முதலியவற்றை நன்குணர்கிறோம். பட்டம் பெற வேண்டுமென்ற விழைவினால் எல்லோரும் விருப்புடன் கல்வி கற்க முற்படுவதால் நாட்டில் கற்றவர் தொகை மிகுதியாகி கல்வி வளர்ச்சியடைகிறது. பரிசு பெறவேண்டுமென்ற பிரிதியால் ரசாயன முறைகளில் புதிய உரத்தைக் கண்டுபிடித்து நிலத்தின் விளைவை மிகுதியாக்கப்படுகிறது. தொழிற்சாலைகளுக்குக் கச்சாப்பொருள்கள் (Raw materials) உற்பத்தி செய்தளிப்பவர்களுக்கும், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலைகளில் (Bonus) போனஸ் அளிக்கப்படுவதால் அவர்கள் முன்னையதைவிட உற்சாகத்துடன் ஒத்துழைத்து தொழிற்சாலைகளை விரைவில் முற்போக்

கடையச் செய்கின்றனர். நாட்டில் கையாளப்படும் பற்பல ஆராய்ச்சிகளில் சிறப்பாக விஞ்ஞானத்துறையில் நிகழ்த்தப் பட்டுவரும் ஆராய்ச்சிகளின் வாயிலாகத் தோன்றிய புதுமை களின் காரணமாக நாடு நாகரிக வளர்ச்சியில் உயர்நிலையெய்தி வருகிறது. இவ்விதம் கல்வியிலும் செல்வத்திலும் தொழிற் றுறைகளிலும் ஆராய்ச்சிகளிலும் முற்போக்குற்று நாகரிக வளர்ச்சி ஏற்படுவதன் காரணமாக ஒரு நாட்டிற்குப் பிறநாடு களின் உதவி தேவையாயிருப்பதால் நாடுகளுக்கிடையே வாணிக வளர்ச்சி அதிகரிக்கிறது. இதன் விளைவாக நாடுகளுக்கிடையே ஒற்றுமை நிலவி (விளங்கி) வருகிறது.

பரிசு இன்மையால் ஏற்படும் தீமை: அரசனுடைய செங்கோல் நிலை நேர்மை தவறினால் நவக்கிரகங்களின் நிலை திரியும். அக்கோள்களின் நிலை திரிபால் மழை பெய்வது பொய்த்துவிடும். மழைபெய்யாது தவறிவிடுவதால் இவ்வுலகின் கணுள்ள உயிர்களுக்கு நல்வாழ்விராது. அன்றியும் பூமியை யாளும் அரசனும் மன்னுயிரைத் தன்னுயிர் எனக்கருதிவாழும் தகுதியற்ற மனப்பான்மையுடையோனாக மாறிவிடுகிறான். இதற்கெல்லாம் காரணம் மன்னனின் செங்கோல் நிலை திரிபே யாம் என்பது புலனாதல் காண்க.

"கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்
மாரி வறங்கூரின் மன்னுயிரில்லை
மன்னுயிரெல்லாம் மண்ணாள்வேந்தன்
தன்னுயிரென்னுந் தகுதியின்றாகும்." —(மணிமேகலை)

இப்பாடலின் மூலம் மேற்போந்த கருத்துக்கள் விளக்கப்பட் டுள்ளன. எனவே ஈண்டு பரிசு எனப்படும் நன்கொடையை அரசனின் செங்கோலுக்கு ஒப்பிடுவோமாயின் கோல் நிலை திரி பால் பல மாறுதல்கள் புலனாதல் போல பரிசு இன்மையால் ஏற்படும் தீது யாதெனக் காண்பாம்.

'வானம் சுருங்கினால் தானம் சுருங்கும்' என்பது போல பரிசளிப்பதிலோ பட்டமளிப்பதிலோ சிற்சிலகுறைகள் ஏற்படு மாயின் மக்கள் எவ்வித முயற்சிகளிலும் பங்கு எடுத்துக்

கொள்ளாமல் சோம்பலில் ஆழ்ந்துவிடுவர். சோம்பல் தோன்றி யதன் காரணமாக நாட்டில் கல்வி நிலை பிற்போக்குற்று செல்வம் குன்றி தொழிற்றுறைகள் மங்கி மறைந்து வறுமைப் பிணி தாண்டவமாடும் வறுமைநிலை காரணமாக நாகரீகம் குறையும். நாகரீகம் குறைவதால் ஒருநாடு தமக்கு வேண்டிய உதவிக்காகப் பிறநாட்டை எதிர்பார்க்கும் நிலைமை மாறிவிடும். அதனால் நாடுகளில் தோன்றும் வாணிக வளர்ச்சி தடைப்படும். அன்றியும் நாடுகளுக் கிடையே வளரவேண்டிய நட்புணர்ச்சியும் ஒற்றுமையும் குலைந்து பகைமையுணர்ச்சி தோன்றும். மேலும்

"மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னார்க்கு
அடிமை புகுத்திவிடும்,"

என்ற தெய்வப் புலவரின் வாயுரைக்கேற்ப பரிசு இன்மையால் தோன்றும் சோம்பலானது, தான் குடிபுகுந்த நாட்டை அதன் பகைவர்களுக்கு அடிமைக்குட்படுத்திவிடுவதோடன்றியும் இதர நாட்டினர்களால் நகைக்கத் தக்க இழிநிலையையு மெய்தச் செய்யும்.

பரிசு அளித்தவர்கள்: கடையெழு வள்ளல்களெனப் பெயர்பெற்ற பாரி. ஓரி காரி, ஆய், நள்ளி, பேகன், அதிகமான் என்பவர்களும். தலைக்கொடையாளி எனப் பெயர் பெற்ற குமணன், தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவர்களுமாவர். இன்னோரன்ன பரிசளித்துப் புகழெய்திய வள்ளல்கள் கணக்கில இவர்களெல்லாம் தம் உயிருள்ளவரையில் கொடையளித்துப் புகழெய்திய வள்ளல்களாகும். இவ்வமயம் அவர்களுடைய பூதவுடல் மறைந்திருப்பினும் புகழுடம்பு மட்டும் நிலைத்து விளங்கி வருகிறது. ஆனால் பூதவுடல் மறைந்த பின்னர் நிலைத்து விளங்கி வரும் புகழுடம்பின் மூலமாக ஆண்டுதோறும் பௌதிக நூல் இரசாயன நூல், மருத்துவ நூல் அல்லது உடல் நூல் இலக்கியம் உலக அமைதி ஆக்கத்துறை இவற்றுள் ஏதேனும் ஒரு துறையில் புதுமையான தேர்ச்சி காட்டும் அறிஞருள் தலை சிறந்தவருக்குத் தேச குல மத வேறுபாடின்றி பரிசு அளிக்கும்படிச் செய்த வள்ளல் ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபல் (Alfred Bernhard Nobel) என்பவராவர்.

**பரிசின் வகைகளும் அவற்றைப் பெற்றவர்களும்** பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பொருட்பரிசும் புகழ்ப்பரிசும் பெற்றவர்களாவர். பற்பல போட்டிப் பந்தயங்களில் முதன்மையாக வெற்றியடைந்தவர்கள் சின்னங்களாகவோ அல்லது பொருள்களாகவோ பரிசு பெற்றவர்களாவர். கல்வி பயின்று அதனால் கிடைக்கும் பட்டத்திற்குரியோர் அறிவுக்காக மெச்சியளிக்கப்படும் தகுதித் தாட்களாகப் பரிசு பெற்றவர்களாவர். ஸர், டாக்டர் போன்ற பட்டப் பெயருக்குரியவர்கள் முயற்சிக்காகவும் அறிவுக்காகவும் மெச்சியளிக்கப்படும் பட்டப் பரிசு பெற்றவர்களாவர். பகுத்தறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் அதற்குரிய பரிசு பெற்றவர்களாவர். தன் உளத்தே உறுதியாகக் கொண்டிருந்த நேர்மையாலும் புறத்தே கொண்டிருந்த அளவிடற்கரிய விடா உழைப்பாலும் அஹிம்சா முறையில் அறப்போர்புரிந்து நம்முடைய அடிமைத் தளையை யகற்றிய அண்ணல் காந்தியடிகள், சொல்லளவிலும் செயலளவிலும் ஏனையோரால் போற்றிக் கொண்டாடப்படுகின்ற புகழ்ப் பரிசிலைப் பெற்றவராவர். அன்றியும் "செயற்கரிய செய்வார் பெரியோர்" என்ற தேவருரைப்படி செய்தற்கரிய செயலைச் செய்து முடித்தவரென்றும் (ஆவி துறந்த பின்னரும்) தேசிய பிதா என்றும் நம்மால் போற்றப்படுகிறார். இன்னும், பரிசின் வகைகளையும் அதனைப் பெற்றவர்களைப் பற்றியும் விரிக்கிற் பெருகும்.

**கைக்கொள்ள வேண்டியது:** நாடுகளில் பற்பல போட்டிப் பந்தயங்களை அடிக்கடி நிகழச் செய்யவேண்டும். பள்ளிகளில் ஆண்டுதோறும் பற்பல போட்டிப் பந்தயங்கள் எவ்வித குறைபாடின்றி நடைபெறச் செய்யவேண்டும். ஒவ்வொரு நாடுகளிலும் தோன்றி வளர்ந்துவரும் பகுத்தறிவுப் போட்டிக் கழகங்களைச் சிறப்புறச் செய்யவேண்டும். கி. பி. 1901-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் பத்தாம் நாளில் (நோபல் இறந்த நாளில்) ஸ்வீடன் மன்னரால் அளிக்கப்படும் நோபல் பரிசுக்கு என ஒதுக்கிவைக்கப்பட்ட நிதி என்றென்றும் நிலைத்து ஓங்கி வளரவேண்டுமென்று நாமெல்லோரும் இறைவனைத் துதிக்கவேண்டும். அன்றியும் இதுபோன்ற பற்பல

நிதிகளை உற்பத்தி செய்வதற்கு ஆவனசெய்யவேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படும் பற்பல போட்டிகளில் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். பள்ளிகளில் நடைபெறும் போட்டிகளில் மாணவர்கள் அவசியம் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். 'கடமை முன்னும் களித்தல் பின்னும்' என்ற முது மொழியைக்கைக்கொண்டு முயற்சியுடன் பற்பல ஆராய்ச்சித் துறைகளில் ஈடுபட்டு அறிவியற் புதுமைகளைக்காணும் வழிகளை ஆராய்ந்தறிய வேண்டும்.

முடிவுரை: பொதுவாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறிக்கோளுடனேயே வாழ்கின்றனரேயன்றி முற்றுந் துறந்த ஞானியைப்போல பற்றற்றவராக (நிஷ்காமியாத்தமாக) இருப்பதில்லை. ஆனால் அத்துணைச் சிறப்புற்ற ஞானியும், பிறப்பு இறப்பற்றுப் பேரின்பநிலை யெய்தவேண்டுமென்ற பெரும் பேற்றினை விரும்பியே இவ்வுலகில் பற்றற்றவராக வாழ்கின்றனர். ஆதலின் உலகிலுள்ள ஒவ்வொருவரும் யாதானுமொரு பயனை விரும்பியே வாழ்கின்றனர் என்பது தெளிவாகிறது. சாதாரணமாக உலகமக்களின் உயர்ச்சிக்குக் காரணம் முயற்சிக்கு அடிப்படையாயுள்ள பரிசிலேயாகும் என்று எண்ணுமளவில் திடீரென ஓர் ஐயம் எழலாம். ஆனால் அதே சமயத்தில் குறிப்பாக, போட்டிப் பந்தயங்களில் கலந்துகொள்பவர்கள். ஆராய்ச்சியாளர்கள். பள்ளி மாணவர்கள் தொழிலாளர்கள், வாணிகர்கள். புலவர்கள், கதாசிரியர்கள் தியாகிகள் முதலியவர்களின் நிலைமையைச்சற்று சிந்திக்குங்கால் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய பலனைத்துய்த்து அனுபவிப்பதற்காகவேண்டி தத்தம் பணியையியற்றுதற்குப்பேரூக்கமடைகின்றனர் என்பது புலனாகும் இப்பேரூக்கத்துக்குக் காரணம் ஒவ்வொருவரும் இயற்றும் பணியின் வாயிலாகக் கிடைக்கும். ஊதியமாகும் அத்தகைய ஊதியமே பரிசு எனக் கொண்டால் அந்தஐயம் தானே யகலும். ஆகவே

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயரும்"

என்று வேந்தன் உயர்வுக்கு அந்நாட்டின்கண் அமைந்துள்ள வரப்புதான் காரணம் என்று வலியுறுத்திச் சொல்லி யுணர்த்தப்பட்டிருப்பதைப்போல ஈண்டு ஒரு நாட்டின் ஆக்கத்திற்குப் பரிசுதான் வித்தாகயமைந்துள்ளது என்று நாம் உணரவேண்டும். எனவே பரிசு பெறவேண்டுமென்று மக்கள் கைக்கொள்ளும் ஊக்கம் காரணமாக ஒரு நாடு எல்லாத் துறைகளிலும் முற்போக்குற்று ஏனைய நாடுகளினால் புகழ்ந்து கொண்டாடும்படியான தகுதிக்குரிய நிலைமையையடைகிறது. ஆதலின் 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற பழமொழியின் படி முயற்சியைக் கைக்கொண்டு அதனால் பிறகு பயன் துய்க்கக் கூடிய உயர்ச்சியின் வருகையை எதிர்நோக்கி வாழ்வோமாக! நலம்!

கு. வேணுகோபால்,
ஐந்தாம் படிவம் 'ஆ' பிரிவு.

10 DEC 1955



10 DEC 1955 MADRAS

# வெண்ணிலா

"குணா"

★

1. வானகத்தில் உலவும் வெண்ணிலாவே — உன்றன்
வரலாற்றைச் சொல்லவேண்டும் வெண்ணிலாவே.

2. உன்னொளி குளிர்ச்சியாக வெண்ணிலாவே — உள்ள
உண்மையை யுரைக்கவேண்டும் வெண்ணிலாவே.

3. வட்ட வடிவாகத் தோன்றும் வெண்ணிலாவே—உன்றன்
வடிவம் அதுதானோ சொல்வாய் வெண்ணிலாவே.

4. இருளையெல்லாம் போக்குகின்றாய் வெண்ணிலாவே—உன்னில்
இருளொன் றிருப்பதென்ன வெண்ணிலாவே.

5. எவ்வளவு தூரத்தினில் வெண்ணிலாவே — நீதான்
இருக்கிறாயோ சொல்லவேண்டும் வெண்ணிலாவே.

6. பகலெல்லாம் எங்கே செல்வாய் வெண்ணிலாவே — நீ
பதுங்கியே யிருக்கின்றாயோ வெண்ணிலாவே.

7. இரவினில் தோன்றுகிறாய் வெண்ணிலாவே — சிலநாள்
இல்லாதிருப்பதென்ன வெண்ணிலாவே.

8. நட்சத்திரங் களுக்கெல்லாம் வெண்ணிலாவே — நீதான்
நாயகனாய் இருக்கின்றாயோ வெண்ணிலாவே.

9. என்னைக் காண வருகின்றாயோ வெண்ணிலாவே—அன்றிநான்
உன்னைக் காண வரலாமோ — வெண்ணிலாவே

10. பால்போலக் காய்ந்துவரும் வெண்ணிலாவே — குளிர்
பனியும் உன்றனாலுண்டாமோ வெண்ணிலாவே.

11. பூரணமாய் நீயும் வந்தால் வெண்ணிலாவே — கடல்
பொங்குவதும் ஏனோ சொல்வாய் வெண்ணிலாவே.

12. உலகம் முழுவதற்கும் வெண்ணிலாவே—நீ
உள்ளவன் ஒருவன்தானோ வெண்ணிலாவே.

# விஞ்ஞான உலகம்

1. பீரங்கி — " ஹக்கட் " என்பவரால், 1543ல் இங்கிலாந்தில் செய்யப்பட்டது.

2. புகைக்கூண்டு — " மாண்ட் கோல்பியர் சகோதரர்களால் " 1783ல் கண்டுபிடிக்கப்பட்டு வெப்பமான காற்றின் உதவியால் மிதக்க விடப்பட்டது. 1825ல் " சார்லஸ் கிரீன் " என்பவரால் நிலக்கரி வாயுவின் உதவியால் ஆகாயத்தில் மிதக்க விடப்பட்டது.

3. பாலங்கள் — " ஸர் ஸேமுவல் ப்ரௌன் " என்பவரால் 1819ல் ட்வீட் நதிமேல் கட்டப்பட்டது.

4. நீராவிப் படகுகள் — நியூயார்க் நகரவாசியான " நாதன் தாம்ப்ஸன் " என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

5. துப்பாக்கிக் குண்டுகள் — " கேப்டன் மில்னி " என்பவரால் 1883ல் கண்டுபிடிக்கப்பட்டது.

6. மோட்டார்கள் — 1884ல் " டைம்லர் " என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

7. ஆகாய விமானம் — " க்ளிமெண்ட் ஆடர் " என்னும் பிரஞ்சுக்காரரால் 1890ல் அக்டோபர் 11ல் கண்டுபிடிக்கப்பட்டு நீராவியின் உதவியால் ஓட்டப்பட்டது.

8. ஆகாயக் கப்பல் — ஜர்மன் தேசத்தவரான " கௌன்ட் செப்பலின் " என்பவரால் 1900ல் கண்டுபிடிக்கப்பட்டது.

9. வெடிகுண்டுகள் (Bombs) " கர்னல் ஹென்ரி ஷிராப்னல் " என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது

10. பாத்தோ மீட்டர் — (கடல் ஆழத்தை அளக்க உபயோகிக்கும் கருவி) " ஸர் வில்லியம் ஸீமன்ஸ் " என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

11. கிராமபோன்—வாஷிங்டன் நகரவாசியான " எமலிபெர்லினர் " என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

12. அயோடின் — " M. D. கோர்பாய் " என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

13 ஒளிபடத் திபத்தை — "ராஜர்பேகன்" 1920ல் கண்டு பிடித்தார்.

14. மைக்ரபோன் — "வீட்ஸ்டோன்" என்பவரால் 1827ல் கண்டுபிடிக்கப்பட்டது.

15 அக்ஷரேகை — கி. மு 162ல், "ஹிப்பார்கஸ்" என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

16. கலங்கரை விளக்கம் — (Light House) "வில்கின்ஸ்" 1836ல் ஏற்படுத்தினர்.

17. வடதுருவத்தை, "மான்டேர் ஜேம்ஸ் கிளார்க்" என்பவர் கண்டுபிடித்தார்.

18. திக்குச்சிகள் — 1860ல் "கூபிரோ ஹாங்க் விட்ஸ்" என்பவர் கண்டுபிடித்தார்.

19. இங்கி — (Ink) "விட்குவியஸ், பிளினி" என்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

20. கட்டுக்கதைகள் — கிரீஸ் நாட்டு அடிமையான "ஈசப்" என்பவரால் கி மு. 130ல் எழுதப்பட்டது.

தொகுப்பு

சே. ந. சேக்யூசுப்,

ஆரும்படிவம்.



# படிப்பின் பயன்

எங்கள் பள்ளியில் சிறுகதைப் போட்டி ஒன்று ஆரம்பமாயிற்று: கற்பனை உலகத்தையே அறியாத நான் அதை அறிந்து திடுக்கிட்டேன். நாளை காலை பத்து மணிக்கெல்லாம் கதை போய்ச்சேரவேண்டும். எட்டாவது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் நான் இது விஷயத்தில் வேறு ஒருவர் தயவை நாட என் மனம் மறுத்தது. ஆகவே எப்படியும் இன்று இரவு கதையை முடிப்பது என்ற நோக்கத்துடன் பிளாஸ்கில் டீயும் தயாராய் வைத்துக்கொண்டு மேஜைமேல் இருக்கும் பேப்பரை பார்த்தவண்ணம் கையில் பேனாவுடன் நாற்காலியில் சாய்ந்தேன். கதை எழுதுபவர்கள் கண்ணை மூடிய வண்ணம் கையில் பேனாவுடன்தானே சிந்தனை செய்வார்கள்; நானும் அப்படியே கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்தேன். இதுதான் சமயமென்று நித்ராதேவி தன் அன்புக் கரங்களால் என்னை அணைத்துக் கொண்டாள். ஒரு அழகான பெண் என் எதிரிலிருந்த மற்றொரு ஈச்சரில் சாய்ந்தவண்ணம் "கனகா! உன்னைத்தானே, என் அன்பிற்கு பாத்திரமான என் மல்லிகாவைப் பற்றிக் கூறப் போகிறேன். கவனமாய்க்கேள்" என்று கதையை ஆரம்பித்தாள் நானும் கதை கேட்கத் தயாரானேன்.

வக்கீல் ராமநாத அய்யரின் மகள்தான் மல்லிகா. என் வீட்டிற்கு இரண்டு வீடு தாண்டித்தான் மல்லிகா எஸ் எஸ். எல். சி. வரை படித்துவிட்டு வீட்டோடு இருந்தாள். கல்யாணி ஆறுவது வரைக்கும் படித்திருந்தாள். மேலும் படிக்க கல்யாணி எவ்வளவோ ஆசைப்பட்டும் பெற்றோர் மறுத்து விட்டனர். ஒரு கடையில் 40 ரூபாயிக்கு குமாஸ்தா வேலைப் பார்க்கும் அவர்கள் இந்த சிலவுக்கு என்ன செய்வது. தவிர அவர்கள் பரம்பரையில் பெண்கள் அதிகம் படிக்கவும் கூடாது என்ற ஒரு வழக்கம். கல்யாணியின் ஆசையை அறிந்த மல்லிகா வீட்டிலேயே டியூஷன் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தாள். ஆனால் இது கல்யாணியின் தாயாருக்கு கட்டோடு பிடிக்க வில்லை. வயது வந்த பெண்ணுக்கு படிப்பு எதற்கு என்று முணுமுணுத்தாள். இப்படியாக மூன்று வருஷம்வரைநடந்தது.

கல்யாணியும் படிப்பில் நல்ல தேர்ச்சி பெற்றுவிட்டாள். விவாகமாகிப் புக்ககம் சென்ருள். மறுமுறை தாய்வீடு வந்த மல்லிகா தன் தோழியைப் பற்றி தன் தாயிடம் விசாரித்தாள். கல்யாணியின் அப்பா பஸ் விபத்தில் இறந்துவிட்டதாயும் கல்யாணியை யாரோ ஒருவர் மணம்செய்து கொண்டதாகவும் அறிந்தாள். அதோடு 3 வருடத்திற்கு பிறகுதான் கல்யாணியை மல்லிகா பார்க்கிருள். கல்யாணியை இரண்டு குழந்தைகளுடன் விதவைக் கோலத்தில் கண்ட அவள் வாய் விட்டு அழுதுவிட்டாள். மல்லிகாவை தேற்றுவதற்குள் "கல்யாணி, இப்பொழுது ஜீவனத்திற்கு என்ன செய்கிறீர்கள்?" என்று விசாரித்தாள் மல்லிகா அதற்குள் பின்கட்டிலிருந்து வந்த கல்யாணியின் தாய் "அம்மா மல்லிகா! வயது வந்த பெண்ணிற்கு படிப்பு சொல்லிக்கொடுத்து கெடுத்துவிடுகிருய். என்று உன்னைக் காணுமல் நான் எவ்வளவு வைதேன் இப்பொழுது நாங்கள் சாப்பிடும் சாப்பாடு உன்னுடையதுதானே அம்மா. எங்கள் உயிர் உள்ளவரை உன்னை மறக்கமாட்டோம்" என்று நன்றி பொங்கக் கூறினுள். ஒன்றும் புரியாமல் விழித்த மல்லிகாவின் சந்தேகத்தை விளக்கினுள் கல்யாணி.

• •

கணவன் இறந்தபிறகு தெரு பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுப்பதாயும் அந்த வரும்படி போதுமானதாய் இருக்கிறது என்றும் கூறினுள். இதை அறிந்த மல்லிகாவின் மனம் சந்தோஷத்தால் பூரித்தது. தான் செய்தது சிறு உதவி அளிக்கிறது. 'மல்லிகா நீ படித்ததின் பயனை அடைந்தாய் என்று அவள் உள்மனம் கூறியது. இதை அறியாமல் தானே சில தாய்மார்கள் படிப்பின்றி பெண்களை அடைத்து வைக்கிருர்கள் என்று அவள் மனம் ஏங்கியது. கனகா இன்னும் உன் தூக்கம் தெளியவில்லை? என் கதை முடிந்தது. மல்லிகா போன்ற பெண்களிடத்தில்தான் எனக்கு அன்பு அதிகம். வருகிறேன்" என் முன் எழுந்தாள் அந்த அழகி "நீங்கள் யார் என்று கூறவில்லையே," என்று எழுந்தேன். "அட நீ இன்னும் அறிந்து கொள்ளவில்லையா என்னை? உலகெங்கும் தமிழ்த்தாய் என்று அழைப்பார்கள்" என்று கூறி மறைந்தாள் அந்த அழகி. தமிழ்த்தாய் என்று வாய் கூறியது. விடிந்து மணி 7½, இன்னுமா தூக்கம் தெளியவில்லை என்ற தாயின் குரலை கேட்டு விழித்

தெழுந்தேன். பேப்பர் வெள்ளையாகவே மேஜையின்மேல் காட்சி அளித்தது. எல்லோரும் கதை எழுதிக்கொண்டு வரும்போது நாம் சும்மா எப்படிப் போவது என்று கனவில் கண்ட கதையை நான் எழுதிக் கொண்டு போனேன். அதைப் பார்த்துவிட்டு பரிகசிப்பதைப் போன்ற பிரமை எனக்கு ஏற்பட்டது. என்ன தமிழன்னையின் பெருமைப் பிரமையில் மூழ்கி இருந்த என்னைக் கனகா எழுதிக்கொண்டு வந்த "தமிழ்த்தாய்"தான் முதல்தரம் என்ற குரலை கேட்ட நான் ஆச்சரியத்தில் மூழ்கினேன். வாழ்க தமிழ்த்தாய் என்று என் வாய் முணுமுணுத்தது. கூடவே படிக்க வசதி இன்றி தவிக்கும் ஓர் இரு குழந்தைகளுக்காவது ஒழிந்த நேரத்தில் உதவி செய்வது என்று என் மனம் முடிவு கட்டியது.

வாழ்க தமிழ்த்தாய்!

பத்மா, மூன்றாம் படிவம்

★

Phone: **80** Tel: **NATARAJA**

சிறந்த சிற்றுண்டி !

உயர்ந்த உணவு !! குளிர்ந்த பானங்கள் !!!

தங்குவதற்கு தகுந்த காற்றோட்டமான அறைகள்
யாவருக்கும் ஆனந்தம் அளிப்பது

**ஸ்ரீ ஆனந்த நடராஜா லஞ்சு ஹோம்**

காபி & சாப்பாடு ஹோட்டல்
கூடலூர் O. T.

போர்டிங் & லாட்ஜிங்
திருப்பாதிரிப்புலியூர்.

பஸ் ஸ்டாண்டுக்கும், ரயில்வே ஸ்டேஷனுக்கும்
அருகாமையிலும், பஜார் மத்தியிலும் அமைந்துள்ளது.

*Proprietors :*

V. V. Narayanasamy Iyer V. V. Seshamani Iyer

# பிராணிகளின் வயது

| | | | |
|---|---|---|---|
| திமிங்கிலம் | ... | 500 | வருடங்கள் |
| முதலை | ... | 300—400 | ,, |
| ஆமை | ... | 120 | ,, |
| யானை | ... | 100 | ,, |
| சிங்கம் | ... | 70 | ,, |
| கரடி | ... | 50 | ,, |
| ஒட்டகம் | ... | 50 | ,, |
| பசு | ... | 25 | ,, |
| புலி | ... | 15—20 | ,, |
| பூனை | ... | 15 | ,, |
| குரங்கு | ... | 15 | ,, |
| தவளை | ... | 15 | ,, |
| ஆடு | ... | 12 | ,, |
| நரி | ... | 10—12 | ,, |
| மண்புழு | ... | 10 | ,, |
| பாம்பு | ... | 10 | ,, |
| முயல் | ... | 8 | ,, |
| எலி | ... | 3 – 4 | ,, |
| எறும்பு | ... | 1 | வருடம் |

## பறவைகளின் வயது

| | | | |
|---|---|---|---|
| காக்கை | ... | 100 | வருடங்கள் |
| கிளி | ... | 100 | ,, |
| வல்லூறு | ... | 100 | ,, |
| கழுகு | ... | 30 | ,, |
| மயில் | ... | 24 | ,, |
| புறு | | 15 – 30 | ,, |
| பெட்டைக்கோழி | ... | 14 | ,, |
| ஆந்தை | ... | 6—8 | ,, |
| வண்ணாத்திப்பூச்சி | ... | 2 | மாதங்கள் |
| ஈசல் | ... | 1 | நாள் |

தொகுப்பு சி. தண்டபாணி, ஆறும் படிவம்.


# விஞ்ஞானப் புரட்சி

சார்லஸ் டார்வின் (1809—1882) பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானியும், பரிணாம சித்தாந்த பேராசிரியருமாவர். 1859ல் அவர் வெளியிட்ட "உயிரினங்களின் உற்பத்தி" என்னும் நூல், உயிர் நூல் சரித்திரத்தில் பெரும் புரட்சி செய்ததோடு, சமூக, அரசியல் நிலமைகளிலும் பலமாறுதல்களுக்கு காரணமாக விளங்குகிறது. நூல் வெளியான நாளன்றே முதற் பதிப்பாக அச்சிடப்பட்ட 1,250 பிரதிகளும் செலவாயின. ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் இது பலமொழிகளிலும் மொழி பெயர்க்கப்படலாயிற்று. இத்தனைச் செல்வாக்கு வாய்ந்த இந் நூலைப்பற்றி இங்கே ஒரு சிறிது ஆராய்வோம்.

"உயிரினங்களின் உற்பத்தி" எனும் இந்நூல் உயிர் களின் பரிணாமத்தைப்பற்றிக் கூறுகிறது. டார்வினுக்கு முன் அறிஞர் பலர் பரிணாம வாதத்தைப்பற்றி பேசியும் எழுதியும் உள்ளனர். ஆயினும், டார்வினே முதன் முதலாக அந்த சித் தாந்தத்திற்குப் பிரத்யட்ச சான்றுகளுடனும், சாத்திர ரீதியி லும், ஒருருவம் தந்தார். அவரது சித்தாந்தம் சுருக்கமாக வரு மாறு:—

மனிதன் உட்பட்ட உயிர்கள் யாவும், இயற்கை நிகழ்ச் சிகள், சக்திகள் ஆகியவற்றின் பயனாகப் பல மாறுதல்கள் அடைந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளன. நாம் இன்று காணும் பலரகமான செடிகள், பிராணிகள் ஆகிய உயி ரினங்கள் தனித் தனியே இப்போதுள்ளவாறே ஆதியிலும் இருக்கவில்லை. அதாவது அவை ஆதியில் படைக்கப்பட்ட போது இன்றுள்ள தோற்றத்தையும், அமைப்பையும் பெற்றி ருக்கவில்லை. வேறுவகையான, பெரும்பாலும் சாமானியமான தோற்றங்களுடனிருந்து பின்னர் வளர்ச்சி முறையில் பல மாறு தல்கள் அடைந்து இன்றைய தோற்றங்களை அடைந்துள்ளன. சுமார் 50 கோடி ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் உயிரினம் தோன்ற ஆரம்பித்தது என விஞ்ஞானிகள் கூறுவர். ஆதியில் உயிரானது சின்னஞ்சிறு உறுப்புக்கூட்டில் துடித்தது. மெல்ல மெல்லவே சிக்கலான உறுப்புக் கூட்டுடையதாக, வளர்ச்சியுற்

CONNEMARA ...
10 DEC 1959
MADRAS



K. Ramalingam, F. IV B.
South Arcot District
INTERMEDIATE CHAMPION 1953 – 54

10 DEC 1956



PUPILS WATERING THEIR GARDEN

✷



DOMESTIC SCIENCE CLASS

றது. இப்போதுள்ள உயிரினங்கள் யாவும் ஆதிகாலத்தில் இருந்தவற்றிலிருந்து மாறுதலடைந்தனவே. இங்ஙனமாகவே இறுதியில் மனிதன் தோன்றலானுன். அவன் அலாதியான சிருஷ்டி அல்லன். மற்ற ஜீவராசிகளுடனும் அவனும் நெருங்கிய தொடர்புடையவன். அவன் வாலில்லா வானரத்தின் வழித்தோன்றல். வழித்தோன்றல் என்ருல் வானரத்தினின்று நேராக வந்தவன் என்று பொருளல்ல. இப்போதுள்ள வாலில்லா பெருங்குரங்கினத்திற்கும் மனித இனத்திற்கும் பொதுவான மூதாதையான ஓரினத்திலிருந்து வந்தவன் என்றே பொருள் கொள்ளவேண்டும். இப்போது நாம் காணும் பல்வேறு இனங்களும், பல கோடி ஆண்டுகளுக்குமுன் ஒரேவகையான உயிரினின்று தோன்றியவைதாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவ்விதமாகவே ஆதியில் மனிதன் வாலில்லாக் குரங்கினின்றும் பெரிதும் வேறுபடாது இருந்திருக்கவேண்டும். ஆனுல், பின்னர் குரங்கிற்கில்லாத சில பண்புகள் அவனிடம் நாளடைவில் தோன்றியிருக்கவேண்டும். அவையே இவனை அப்பிராணியினின்றும் பிரித்தன. இதுவே சுருங்கக்கூறின் 'டார்வின் பரிணுமக் கொள்கை'' யாகும்.

டார்வினின் பரிணுமக்கொள்கை இதோடு பூர்த்தியாகி விடவில்லை. உயிரினங்கள் மேலே குறித்தமாதிரி, மாறுதலடைவதற்குரிய காரணங்கள் யாவை? என்னும் கேள்விக்கு பதில் சொல்லியாகவேண்டும். பரிணுமக்கொள்கை பூரணவிளக்கம் பெறுவதற்கு இது இன்றியமையாததாகும்.

இக் கொள்கை டார்வினுக்கு வந்தது. உயிரினங்கள் அதிவேகமாக இனப்பெருக்கம் செய்யும் இயல்பினவாகவிருந்தும், அங்ஙனம் அவை பெருகிக்கொண்டே போகாமல் சாதாரணக் கணக்கிலேயே பெருகிவருவதற்கும், அவை நாளடைவில் அடைந்துவரும் மாறுதல்களுக்கும் ஏதோ ஒருவித தொடர்பிருக்கவேண்டுமென அவருக்குப் பட்டது. தன் பெருக்கத்திற்கு யாதொரு தடையுமில்லாதிருந்தால் ஒவ்வோர் உயிரினமும் பெருகிக்கொண்டே போகும்

ஆனுல் பெருகுவதற்கு போதுமான இடமும், உணவும் கிடைக்காமலிருப்பது ஒரு தடவை. அதனுல் உயிர்கள்

அமோகமாக உற்பத்தியானாலும், நீண்ட காலம் பிழைத்திருப்பது அரிதாகிறது.

கிடைத்துள்ள இடத்திற்காகவும், உணவுக்காகவும் அவைகளுக்குள் போராட்டம் ஏற்படுகிறது. இப்போராட்டத்தில் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப புதிய பண்புகளும், மாறுதல்களும் அடைந்து நீடித்து வாழ தகுதிப் பெற்றவை. நோய், மரணம் முதலிய ஆபத்துக்களினின்றும் மீண்டும் உயிர் பிழைத்து இனப்பெருக்கம் செய்கின்றன. இங்ஙனமாக தகுதி பெறாதவை மேலே சொன்ன ஆபத்துகளுக்கு இரையாகி மடிகின்றன. தகுதியுள்ளவை பிழைப்பதும், தகுதியற்றவை அழிந்து மறைவதும் இயற்கையின் தேர்தல் முறையாகும். பல தலை முறையாக இந்த தேர்தல் முறை நடந்து வருகிறது. இதனால் புது உருவமும், உடலமைப்பு முடைய உயிரினங்கள் ஒரு புது இனமாகி வளர்ச்சியடைகின்றன. இயற்கையின் இத் தேர்தல் முறையே பரிணாமக் கொள்கையின் முக்கியாம்சம். இவ்விதமாக முடிவு செய்த டார்வின் தம் நூலுக்கு "இயற்கை தேர்தல் முறை வழிவந்த உயிரினங்களின் உற்பத்தி" என்னும் பெயர் தந்தார்.

டார்வினின் இப் பரிணாமக் கொள்கை வேறு ஊகத்தினால் மட்டும் வகுக்கப்பட்டதன்று. அபூர்வமாகக் கிடைத்த பலவகைச் செடிகள் பிராணிகள் ஆகியவற்றைக் கொண்டு பிரத்யட்சமாக அவர் செய்த ஆராய்ச்சிகளும், மற்றும் இதர அறிஞர்கள் செய்த ஆராய்ச்சிகளும் இக் கொள்கையின் உண்மையை உறுதிப் படுத்தியுள்ளன. அறிஞர் 'அக்ஸ்லி' இக் கொள்கையை பிரசாரஞ் செய்தார். ஆனால் பல அறிஞர்களும், மதகுருக்களும், இக் கொள்கை விவிலிய வேதத்தில் கூறப்பட்டுள்ள படைப்பு முறைக்கு முற்றிலும் முரணானதெனக் கண்டித்தனர். சமய வாதிகள் போற்றும் விவிலிய வேதம், உயிர்கள் இன்று காணும் தோற்றத்துடனேயே ஒரு காலத்தில் படைக்கப்பட்டனவெனக் கூறுகையில், மனிதன் உட்பட்ட உயிரினங்கள் யாவுமே சின்னஞ்சிறு அமைப்பிலிருந்து படிப்படியாக வளர்ச்சியும், மாறுதலுமடைந்து (இந்நிலையை யடைந்துள்ளன) என்பதையும், மானிடனின் மூதாதையும், வாலில்லா வானரத்தின் மூதாதையும் ஒன்றே என்பதையும்

சமய வாதிகள் எவ்விதம் ஏற்றுக்கொள்வர்? கட்சிப் பிரதி கட்சிகளும் சொற்போர்களும் எழுந்தன. இறுதியில் டார்வினின் பரிணாமக் கொள்கை பொதுவாக அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

அறிஞர்கள் உயிர்நூலாராய்ச்சியில் தீவிரமாக இறங்கினர். தாவரநூல், விலங்குநூல் பற்றிய பாட புத்தகங்கள் புதிய கொள்கைப்படி திருத்தியமைக்கப்படலாயின. இன மாறுதல்கள் பரம்பரை இயல்பு ஆகிய விஷயங்களைப் பற்றிய பல அரிய சோதனைகள் செய்யப்பட்டன. அக் காலத்தில்தான் உயிர்நூல் தோன்றியது.

பெ. கு. லோகநாதன்,
ஐந்தாம் படிவம் 'முதல்' பிரிவு.

For Cheapest and Varieties

OF

Toilets, Hair Oils, Stationaries, Account Books, School Books, Note Books, Printing Papers, Babies Tinned Milk Foods, etc., etc., etc.

★

VISIT

A. Ramalingam & Bros.,
GENERAL MERCHANTS & BOOK SELLERS
26, Lawrence Road,
TIRUPAPULIYUR (S. A. Dt.)

# உபாத்தியாயர்களும் கிராம சீர்திருத்தங்களும்

★

இப்பூவுலகின்கண் மாந்தர் அனைவரும் பல தொழில்களில் அமர்ந்து தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். அத்தொழில் களுள் உபாத்திமைத் தொழிலும் ஒன்ருகும். இத்தகைய ஆசிரியர்களிடமே பெற்ருேர் தத்தம் குழந்தைகளைக் கல்வி கற்க அனுப்புகின்றனர். அக் குழந்தைகளை சீர்படுத்துதல் அவசியம். அவர்களது பிற்கால வாழ்க்கை எத்தன்மையதாய் இருக்கவேண்டுமென்பதை ஆசிரியரின் மூலமே உணருகின் றனர். பிள்ளைகளின் நடத்தை, குணம் இவற்றிற்கு ஆசிரியரே வழிகாட்டியுமாவார்.

இத்தகைய ஆசிரியர்களுள் பலவகை உண்டு. எட்டு வகுப்புகள் வரை கல்வி பயின்று போதனு முறை பெற்ற ஆசிரியர்களுக்கு ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர் என்றும், பத்து வகுப்புகள் வரை கற்றுப் போதனு முறை பயின்ற ஆசிரியர்களுக்கு உயர்தர பாடசாலை ஆசிரியர் என்றும் பெயர். ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களே கிராமங்களிலும், சிறிய ஊர் களிலும் வேலை செய்வோராவர். அங்கு ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் வரையிலும்தான் உண்டு. இத்தகைய ஆசிரியர் களே, பிள்ளைகள் பெரிய வகுப்புகளில் படிக்க அஸ்திவாரம் காட்டுபவராவர். பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கை நன்கு அமைய இவர்களே அடிகோலுபவராவர். இத்தகையோர் இருக்கும் கிராமத்தை ஆராய்வோமாக

நமது இந்தியா கிராமங்கள் நிறைந்த தேசம் இந்திய மக்களுள் பெரும்பாலோர் கிராமவாசிகளே, கிராமம் என்பது பல குடும்பங்களாலானது. முன்னுட்களில் கிராமம் உன்னத நிலையில் இருந்தது. தற்போது கிராமம் விசனிக்கத்தக்க நிலை யில் இருக்கிறது. ஏனெனில் ஐரோப்பிய வியாபாரம், துரித மான போக்குவரவு சாதனம், இயந்திர சாதனம் முதலியவை அதிகரித்து பட்டண வாழ்க்கை வலுக்க ஆரம்பித்ததனுல், கிராம சௌகரியங்கள், நன்மைகள், கட்டுப்பாடுகள் குறைந்து, கிராம வாழ்க்கை சீர்கேடடைந்து, வறுமை, பிணி, அறியாமை,

சண்டை, சச்சரவு முதலியன குடிகொண்டுள்ளது. இத்தகைய கிராமத்தில் அறிவுடன் விளங்குபவர்கள் ஆசிரியர்களே.

ஆசிரியர்கள் கிராமத்தைச் சீர்திருத்த வேண்டுவது அவசியமானதால் கல்வி புகட்டுவதோடு உலக அறிவையும் புகட்டி கிராமத்தில் காணும் அகக்கேடான பழக்கங்களை எடுத்துக்கூறி, அவற்றைச் சீர்திருத்த தாமும் தன் நடத்தையில் காட்டி, பள்ளிகளிலும் சுகாதாரத்தைப்பற்றிச் சொற்பொழிவுகளும் நாடகங்களும் நடத்தி அவர்களைச் சீர்திருத்தும்படிச் செய்தல்வேண்டும்.

கிராமம் சீர்கேடடைய கல்வி அறிவின்மை ஓர் காரணமாகும். எழுதப்படிக்கத் தெரிந்தோர் மிகச் சொற்பம். ஆகையால் இத்தகையோருக்கு ஆசிரியர் ஓய்வுநேரங்களில் கல்வி புகட்டலாம். கல்வியின் பலன்களை எடுத்துக்கூறி பெற்றோர் சங்கம், வாசகசாலை, நாடகம், மாதர் சங்கம் முதலியவற்றைக் கொண்டும் கல்வி அறிவைப் புகட்டலாம். மேலும் விவசாயத்தில் அதிக தாழ்ந்த நிலையை அடைந்திருப்பதால், நவீன முறைகளைக் கையாளச் செய்து அதிக அறிவு புகட்டலாம். நவீன முறைகளைக் கையாண்டு கிராமத்தை உன்னத நிலையை அடையச் செய்யலாம்.

கிராமங்களில் வறுமை அதிகமாகக் குடிகொண்டிருக்கிறது. இதற்காக ஓய்வு நேரங்களில் பல உப தொழில்களைக் கூட்டுறவு முறையில் செய்து தங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வழிகளைக்காட்டலாம் நவீன தொழில் முறைகளையும், விவசாய முறைகளையும் பற்றி அறிஞர்களைக்கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தலாம். இதில் தேர்ச்சிபெற்ற ஆசிரியரே இருந்தால் பெரியோர்களுக்கும் பயிற்சி அளிக்கலாம். இன்றேல், தேர்ந்த பயிற்சிபெற்ற நிபுணர்களைக் கொண்டு கிராம மக்களுக்குக் கற்பிக்கலாம். பள்ளியிலும் சிறுவர்களுக்கு அவர்களுடைய வயதிற்கும் பருவத்திற்கும் தக்கதான சிறு கைத்தொழில்களைக் கற்பிக்கலாம். ஏனெனில் இவர்களே பிற்காலத்தில் கிராமச் சமூகத்தை முன்னேற்றமடையச் செய்யும் பெரியோர்களாவர்.

கிராமவாசிகளிடையே ஜாதி, மத பேதங்களும், கட்சிப் பிரிவினைகளும் உள்ளன. இதனால் சண்டை சச்சரவுகளும் ஏற்படுகின்றன. இதுவும் கிராம முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாகும். கிராம மக்களை ஒன்று சேர்த்து, அவர்களிடையே உள்ள ஜாதி, மத பேதங்களை ஒழித்து இவற்றாலுண்டாகும் தீமைகளை எடுத்துக்கூறி, அவர்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சியை உண்டு பண்ணி சமாதானத்தை நிலைநாட்டி, ஏககுடும்பம் போல் ஒத்து வாழச்செய்யவேண்டியது ஆசிரியரது கடமையாகும். இதற்கு ஆசிரியரே முன்மாதிரியாக இருக்கவேண்டும். கிராமங்களிலுள்ள கட்சி, பிரதி கட்சிகளில் சேராமல், நடுநிலமை வகித்துக் கட்சிகளை ஒழிக்கவேண்டும்.

கிராம மக்களிடையே சுகாதாரமின்மையே அதிகமாகக் காணப்படுகின்றது இதுவும் கிராம முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாகும். இதனால் அநேகர் நோய்வாய்ப்பட்டு மடிகின்றனர். இதற்கு ஆசிரியரே பெரிதும் வழிகாட்டியாக இருந்து. பலவிதங்களிலும் கிராம சுகாதாரத்தை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் முதலில் ஆசிரியர் தாமே சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்துப் பின் மாணவர்களையும் அவ்வாறு செய்ய தூண்டவேண்டும். பிள்ளைகளின் செய்கைகளைக் கண்டு பெற்றோர்கள் பிரமித்து அவர்களும் தங்கள் பிள்ளைகளின் நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவார்கள். பாடசாலைகளில் சுகாதார வாரம் என்று ஏற்படுத்திப் பெற்றோரை வரவழைத்து, சுகாதாரக் கொண்டாட்டங்களை நடத்தலாம். நல்ல சுகாதார முறையில் வளர்க்கப்பட்ட குழந்தைகட்குப் பரிசுகள் வழங்கலாம். ஆசிரியர் மாணவரோடு, கிராமங்களுக்குச் சென்று, சுற்றுப்புறச் சுத்தத்தையும், தெருச் சுத்தத்தையும் கவனிக்கும்படி கிராம மக்களைத் தூண்டிவிடலாம். ஆசிரியரும் மாணவரோடு சேர்ந்து அவற்றைச் சுத்தம் செய்து காட்டலாம். அடிக்கடி பெற்றோர் சங்கம், பள்ளிக்கூட நாள், பாலர் நாள், வாலிபர் சங்கம்முதலிய சங்கங்களைக் கூட்டி அவர்களுக்குச் சுகாதாரத்தைப் பற்றியும், கல்வியின் உயர்வைப் பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றலாம். சிறுவர்களைக் கொண்டு சுகாதார சம்மந்தமான நாடகங்களை நடத்திக் காட்டலாம். தொத்து நோய்கள் பரவாமலிருக்கவும்,

அம்மை குத்திக்கொள்ளவும் தூண்டவேண்டும். பள்ளியில் சேரும் ஒவ்வொரு மாணவனையும் அம்மை குத்திக்கொள்ள வற்புறுத்தவேண்டும். தொத்துநோய்கள் பரவாமல் தடுக்கும் முறைகளையும், அதற்குவேண்டிய சிகிச்சைகளையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துக்கூறவேண்டும். இது சம்மந்தமாக, ஆசிரியர் முன்மாதிரி காட்டுவதுடன், வெறுமனே வாயால்மட்டும் சொல்லாமல் செயலில் காட்டவேண்டும். சுகாதார அதிகாரிகளோடு ஒத்துழைக்கவேண்டும்.

ஆகையால் கிராமத்தில் உள்ள உபாத்தியாயர்கள் மேற்கூறிய, கிராமக் குறைபாடுகளை நீக்கி, பல துறைகளில் மனதைச் செலுத்தி, கிராமத்தைச் சீர்திருத்தி, முன்னேற்றமடையச் செய்வார்களாக.

எட்வின் சாமுவேல்,
(பழைய மாணவன்.)

DEC 1955
MADRAS



# அதிசயம் ஆனால் உண்மை.

1. ஆணுடைய மூளையின் நிறை 3 பவுண்டு 8 அவுன்ஸ். பெண்ணுடைய மூளையின் நிறை 2 பவுண்டு 11 அவுன்ஸ்

2. 1865ம் ஆண்டு வான்ஸ்டீபன் என்ற ஜெர்மானியர் தபால் கார்டை வெளியிட்டார்.

3. திரையில்லாமல் வெண்மேகத்தை திரையாகக்கொண்டு ஆகாயத்தில் சினிமா காண்பிக்கும் முறையை டாக்டர் மான்ஹெய்மர் என்ற ஜெர்மானியர் கண்டுபிடித்தார்.

4. வெனிஸூலாவில் ஒரு வகை மரங்கள் இருக்கின்றன. அம்மரப் பட்டைகளிலிருந்து ஒரு வகைப்பால் கசிகிறது. அது சுவையாய் இருக்கிறது. பாஸ்பேட் உப்புகளும் சர்க்கரையும் அதில் அதிகமாய் இருப்பதாகப் பரிசோதித்தவர்கள் கூறுகின்றனர்.

5. இந்தியாவில் சில இடங்களில் ராட்சஸ தேனீக்கள் 18 அடி உயரமுள்ள தேன் அடையைக் கட்டுகின்றன.

6. கடிகாரத்திலுள்ள மெயின் ஸ்பிரிங் சுற்றும் தூரம் வருடத்திற்கு 3500 மைலுக்கு மேலாம்.

7. ஊரில் அமைதி நிலவும்பொழுது நாய் குரைக்கும் சப்தம் நான்கு மைல் தூரம் வரை கேட்குமாம்.

8. உலகிலேயே பெரிய விளையாட்டு அரங்கம் புராதன ஏதன்ஸ் நகரில் இருக்கிறது. அவ்வரங்கத்தில் 3,50,000 பேர் தங்கலாம்.

9. உலகத்தில் இடையில் நிற்காமல் அதிக தூரம் ஓடும் ரயில் இங்கிலாந்திலுள்ள 'பிளையிங் ஸ்காட்ஸ்மென்' இந்த ரயில் புறப்பட்ட இடத்தில் இருந்து 320 மைலுக்கு மேல் சென்றே நிற்கிறது.

தொகுப்பு

சி. தண்டபாணி,

ஆறும் படிவம்.

# சிறு பட்டி.

**தலைவி:—** ஒலியும் ஒளியும் ஒருங்கே உவந்து அணி செய்யும் வளை புனை தோழி! கேள்; நெருநல் நிகழ்ந்ததை.

**தோழி:—** அகிலும் முல்லையும் அணிபெற நாறும் ஐம்பால் கூந்தலாய்! ஆம்பல் மணக்கும் செந்துவர் வாயாய்! தாமரைத் தாதுவின் நிறம்பொதி பசலை மேனியாய்! சொல்.

**தலைவி:—** கல்லா யிளமைக்காலத்தே, நாம் கருமணற் பாங்கர் சிறு வீடு கட்டிச் சிறுசோருக்கிச் சிரித்து விளையாடுங்கால் ஆண்டுப் போந்து அழகுறு மணல் வீட்டைத் தன் காலால் எற்றி, பூந்துணர் மாலைகளைப் பிய்த்தெறிந்து வரிப்பந்துகளை வாரிக்கொண்டோடி நம்மையெல்லாம் துன்பத்திலாழ்த்திய அச்சிறு பட்டி (கட்டுக் காவலற்றவன்) நேற்று நம் நெடு வீதிப் போந்தான்.

**தோழி:—** ஆ! அக்கள்வன் மகன் வந்தனனோ! மேலும்!!

**தலைவி:—** யானும் என் அன்னையும் இல்லிடை யிருந்தோம்.

**தோழி:—** பின்.

**தலைவி:—** அவன் எங்களிடை வந்து நீர்வேட்கை உடையேன் என உண்ணு நீர் வேண்டினன். அன்னை என்னை நோக்கி பொன் கிண்ணத்தில் அவற்கு நீரூட்டி வாவெனக்கூறி உட்சென்ருள்.

**தோழி:—** நீ யென் செய்தனை!

**தலைவி:—** நான் அவன் தன்னை உணரேனாய் நீர் வேட்கைத் தணிப்பான் அவன்பாற் சென்றேன். அவனோ ..!

**தோழி:—** தயக்கம் ஏன் சொல்.

**தலைவி:—** அவன் வளையணி முன்கைப்பற்றினன், நான் அன்னாய் இவன் செயல் காண் என்றேன், அன்னை அலறிப் புடைத்தோடி வந்தாள்.

**தோழி:—** நன்று செய்தனை.

தலைவி:— ஆம் தோழி. நான் அன்னைபால் தாயே இவன் நீர் உண்ணுங்கால் விக்குள் உற்றான் என்றேன்.

தோழி:— ஓகோ! தக்கதுதான் பின்னர்.

தலைவி:— பின் அன்னை அவன் முதுகைத் தடவி விட்டாள்.

தோழி:— அழகு! அழகு!!

தலைவி:— எல்லி! நான் என் செய்குவன். அச்சிறு பட்டி தன் கடைக்கண்ணால் என்னைக் கொல்பவன்போல் நோக்கி நகை செய்தான்.

தோழி:— நீ பொன் செய்.

தலைவி.— நான் அவன் வரு வழி நோக்குதல்தான் செய்குவன்.

x x x

இக்காட்சியை, "செறுத்த செய்யுள் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலர்" தான் பாட மேற்கொண்ட குறிஞ்சிக் கலியில் வீறுபெற அமைத்துச் செல்கிறார். இதன் கண் சிறுபிள்ளை நிகழ்ச்சிகளும், காதற் செய்தியுரைக்கும் நாகரிகப் பண்புகளும் காணப்படும் விதங்களை நோக்குழிப் பண்டைத் தமிழர் தம் நிலை நமக்கோர் புத்துணர்வு ஊட்ட நிற்கிறது. அவர் தம் அரும்பெருங்காவியக் கருவூலங்களை நாம் சுவைத் தின்புறற்பாலம்.

வாழ்க தமிழ்!

வித்துவான் ப தண்டபாணி.



தமிழ் வாழ்க.

# திருவள்ளுவர் மாணவர் தமிழ் இலக்கிய மன்றம்

## தூயதாவீது உயர்நிலைப்பள்ளி

கூடலூர் முதுநகர்

# ஆண்டு அறிக்கை 1953—54.

---

நமது பள்ளியில் மாணவர்கள் சொற்பொழிவாற்றுந் திறன் பெறவேண்டும் என்னுங் கருத்தால் உயர்நிலைப்பள்ளிக்கும், நடுநிலைப்பள்ளிக்கும் தனித்தனியாக முறையே "மாணவர் இலக்கிய மன்றம்" "திருவள்ளுவர் தமிழ் மன்றம்" என்ற இரு மன்றங்களும் இவ்வாண்டின் தொடக்கத்தில் தோற்றுவிக்கப்பட்டன. அவ்விரு மன்றங்கட்கும் செயலாளர், செயல் குழுவினர் 7—7—1953 அன்று உயர்திரு G. H. கிளாரன்ஸ், B.A., L.T., துணைத்தலைமையாசிரியர் அவர்கள் தலைமையிலும், ஆசிரியர் திரு. S. துரைசாமி அவர்கள் தலைமையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

23—7—1953 அன்று "மாணவர் இலக்கிய மன்றம்" உயர் திருவாளர் வைத்தியரத்நம் பு. வே. தேவராஜ முதலியார் (அகஸ்திய ஔஷதாலயம், புலிசை) அவர்களால் சிறப்பாகத் திறப்புவிழா நடைபெற்றது. அவ்வமயம் "தமிழர் வீரம்", "தமிழை வளர்ப்பது எப்படி", "தமிழ்" என்னும் பொருள்களைப் பற்றி முறையே A. J. ராமன் VI. F., R. பாலசுப்பிரமணியன் IV F. உயர்திரு வித்துவான் ந தண்டபாணி, தமிழாசிரியர் அவர்கள் ஆகிய மூவரும் சிறப்புறப் பேசியபின் தலைவர் முடிப்புரை கூறினர். தலைமைத் தமிழாசிரியர் திரு. வித்துவான் R. பழநியாண்டி முதலியார் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

நடுநிலைப் பள்ளிக்குரிய "திருவள்ளுவர் தமிழ் மன்றம்" உயர்திரு. ம. அரங்கநாதன், துணைக்கல்வி ஆய்வர், கடலூர் வட்டம், அவர்களால் சிறப்பாகத் திறந்துவைக்கப்பெற்றது. பின் இவ்விரு மன்றங்கட்கும் இந்தி ஆசிரியர் திரு K. ஜெய

ராமன், வித்துவான் திரு. R. பழநியாண்டி முதலியார், வித்துவான் திரு. க. சம்பந்தனுர், வித்துவான் திரு ந. தண்டபாணி முதலான ஆசிரியர்கள் தலைமை தாங்க A. J. ராமன், VI F, கருணாகரன் VI F, R. பாலசுப்பிரமணியன் IV F, முத்துக்குமாரசாமி V F, பாலலட்சுமி I F, சுப்புலட்சுமி III F, முதலான மாணவர்கள் "குடியாட்சியா, முடியாட்சியா சிறந்தது?" என்பதைப் பற்றித் தடைவிடையாடலாகவும், "பழங்காலத் தமிழ்ப் பெண்டிர்", "புறநானூறு", "தமிழின் கதி", "நட்பு", "கைத்தொழில் என்னும் பொருள்களைப் பற்றிச் சொற்பொழிவு முறையாகவும் பேசினுர்கள். அவ்வப்போது செயலாளன் K. S. சம்பந்தம் VI F மாணவனுல் நன்றி கூறப் பட்டது.

4—9—53 அன்று இரு மன்றங்களின் சார்பாக தமிழ்ப் பெரியார் திரு. வி. கவின் மறைவு பற்றி பள்ளிக் கடவுள் வணக்கத்திற்குப் பின், பள்ளித் தலைமை ஆசிரியர் திரு G. M. அருமைநாயகம் B. A., L. T., அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடத்தப்பட்டது. அவ்வமயம் மாணவர் பலரும் ஆசிரியர் திரு. S. முத்துக்கிருஷ்ண அய்யர் B. A., L. T., திரு. C. R. ஸ்ரீராமுலு, வித்துவான் திரு. R. பழநியாண்டி முதலியார் முதலானவர்களும் திரு. வி. கவின் குண நலன்களை எடுத்துப் பாராட்டிப் பேசி அவர்தம் மறைவு தமிழர்கட்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று பேசி முடித்தார்கள்.

அடுத்து இவ்விரு மன்றங்களின் சார்பாகப் பேச்சு, கட்டுரை, இசை, கையெழுத்து, மனப்பாடம், நடிப்பு முதலானவற்றில் போட்டிகள் வைத்து அவற்றில் வெற்றி பெற்ற மாணவர்கட்குத் திரு. மு. வரதராசனுர் நூல்கள் ஏறக்குறைய 75 ரூபாய் அளவிற்கு வாங்கி உயர்திரு. E. V. சோமசுந்தர முதலியார் B. A., ஆணையர் (நகராண்மைக் கழகம், கடலூர்) அவர்கள் தலைமையில் பரிசளிக்கப்பட்டன.

இறுதியாக இவ்விரு மன்றங்கட்கும் பள்ளித் தலைமை ஆசிரியர் G. M. அருமைநாயகம் B. A., L. T., அவர்களின் பேராதரவால் 5-3-54 அன்று உயர்திரு. S. சுந்தரம் B. A., B. L.,

(தென்னாற்காடு மாவட்டச் சாரணச் செயலர், மஞ்சைநகர்) அவர்களின் சீரிய தலைமையில் ஆண்டு நிறை விழா சிறப்பாக நடைபெற்றது அவ்வமயம் வித்துவான் திரு. சுந்தரசண்முகனார், தலைமைத் தமிழாசிரியர் (பெத்து செமினரி உயர்நிலைப் பள்ளி, புதுவை) அவர்களும் உயர்திருவாளர். ம. அரங்கநாதன், துணைக்கல்வி ஆய்வர், கடலூர் வட்டம் அவர்களும் முறையே "நினைவாற்றல்" 'குறிக்கோள்" என்ற தலைப்பையொட்டிப் பேச தலைவர் முடிப்புரைக்குப்பின் தமிழாசிரியர் க. சம்பந்தனார் ஆசிரியச் செயலர் அவர்களால் நன்றிகூற மாணவியர் நாட்டு வாழ்த்து பாடக் கூட்டம் இனிது முடிவுற்றது மாணவர்கட்கு இன்சுவைக்கட்டியும் வழங்கப்பட்டது

G. M. **அருமைநாயகம்** B. A., L.T.,
*பள்ளித்தலைமையாசிரியர்.*

*வித்துவான்* **க. சம்பந்தம்**
*தமிழாசிரியர்.*

**சொ. இராமலிங்கம்**, *ஆசிரியர்.*
*ஆசிரியச் செயலர்கள்.*

*இருமன்றங்களின் செயலாளரும் செயற்குழுவினரும்.*

**மாணவர் இலக்கியமன்றம்**

K. S. *சம்பந்தன்* VI F B. *செயலாளன்.*

N. *சோமு* V F A. *துணைச்செயலாளன்*

1. K. *வேணுகோபால்* V F B.
2. *நாராயணன்* IV F B.
3. *தியாகராசன்* IV F A.

} *செயற்குழுவினர்.*

**திருவள்ளுவர் தமிழ் மன்றம்.**

K. *கோவிந்தசாமி* III F A. *செயலாளன்.*

A. *சந்திரன்* II F A. *துணைச்செயலாளன்.*

1. V. T. D. *குமார்* II F B.
2. *லெஸ்லி* III F B.
3. *மொய்தீன்* I F D.

} *செயற்குழுவினர்.*

# தூயதாவீது உயர்நிலைப்பள்ளி

## கூடலூர் முதுநகர்.

திருவள்ளுவர் மாணவர் இலக்கிய மன்றத்தின் சார்பாக பரிசுபெற்ற மாணவர் பெயரும் அவர் பெற்ற பரிசும்.

| போட்டியின் பெயர். | தகுதி | மாணவர் பெயர் | வகுப்பு | பரிசின் பெயர். |
|---|---|---|---|---|
| கட்டுரை | முதல்வர் | V. R. கருணாகரன் | VI B. | நெடுந்தொகை விருந்து |
| | இரண்டாமவர். | A. வீரபாகு | VI B. | நற்றிணை விருந்து |
| | I | K. வேணுகோபால் | V B. | இலக்கிய ஆராய்ச்சி |
| | II | K. தியாகராசன் | V B. | பர்ணுட்ஷா |
| | I | R. எட்வின் | IV A. | பாவை |
| | II | M. தண்டபாணி | IV A. | அறமும், அரசியலும் |
| | I | C. கண்ணன் | III B. | நெல்லைத் தமிழ்ப்புலவர் |
| | II | A. தட்சணா | III C. | இளங்கோ |
| | I | K. சாம்பசிவம் | II A. | வெறுமுரசு |
| | II | P. அம்பிகாபதி | II B. | தம்பிக்கு |
| | I | V. ஆதிமூலம் | I B. | அறம் வளர்த்த நம்பி |
| | II | R. செல்வராஜ் | I A. | மும்மணிகள் |
| மனப்பாடம் | I | S. மணி | VI B. | பர்ணுட்ஷா |
| | II | B. ஜெகதீசன் | VI A. | திருக்குறள் தெளிவுரை |
| | I | K. கலியபெருமாள் | V A. | மனச்சான்று |
| | II | K. வேணுகோபால் | V B. | திருக்குறள் தெளிவுரை |
| | I | A. வைத்தியநாதன் | IV B. | மனச்சான்று |
| | II | S. ஜெயராமன் | IV B. | திருக்குறள் தெளிவுரை |

| | | | |
|---|---|---|---|
| | I | S. பால்ராஜ் III B. | திருக்குறள் தெளிவுரை |
| | II | C. சம்பந்தம் III B. | சாக்கிய சிம்மன் |
| | I | B இலக்குமி II C. | திருக்குறள் தெளிவுரை |
| | II | T. சந்திரா II C. | கொலம்பஸ் |
| | I | C. பழநிவேலு I B. | திருக்குறள் தெளிவுரை |
| | II | R. பாலலட்சுமி I C. | வெறு முரசு |
| பேச்சுப்போட்டி | I | V. R. கருணாகரன் VI B | தமிழ் நெஞ்சம் |
| | II | A. J. ராமன் VI B. | கி. பி. 2000 |
| | I | T. A. சுப்பிரமணியன் V B. | அறமும் அரசியலும் |
| | II | K. வேணுகோபால் V B. | மாதவி |
| | I | R. பாலசுப்பிரமணியம் IV B. | கண்ணகி |
| | II | M. தண்டபாணி IV A. | அன்னைக்கு |
| கையெழுத்துப் போட்டி | I | K. கோவிந்தசாமி III A. | சொல்லின் கதை |
| | II | N. சுலோசனு III C. | குறள் மூலம் |
| | I | K சாம்பசிவன் II A. | எழுத்தின் கதை |
| | II | A. சந்திரன் II A. | குறள்மூலம் |
| | I | S. தில்லைநாயகம் I D. | சேக்கிழார் |
| | II | R சந்திரா I C. | குறள்மூலம் |
| இசைப் போட்டி | I | A. J. ராமன் VI B. | இசையமுது பாகம் |
| | II | V. ராமலிங்கம் VI A. | சாக்கிய சிம்மன் |
| | I | அகமத்பாவா V B. | கி. பி. 2000 |
| | II | இஸ்மாயில் V A. | கொலம்பஸ் |
| | I | M. சுந்திரமூர்த்தி IV B. | குறள் |
| | II | I. சையத்மரைக்காயர் IV A. | கலைக்கோயில் |
| | I | S. பால்ராஜ் III B. | கயிலை மால்வரை |
| | II | R. S. சரோஜா III C. | வாழ்க்கை ஒளி |
| | I | A. ஆல்பர்ட் II D. | அருள் |
| | II | K. R. சுப்புலட்சுமி II C. | அறவியல் கட்டுரைகள் |

★

எங்கள் கடையில்
பாடசாலைகளுக்கு
வேண்டிய எல்லா
விதமான நோட்டுகளும்
புத்தகங்களும்
ஸ்டேஷனரி
தினுசுகளும்,
சோப்புகள் பாட்டரிகள்
விளையாட்டு சாமான்கள்
புத்தக பைகள்
முதலியன
மலிவான விலையில்
கிடைக்கும்.

★



- மேலும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட சேர்க்கானியா இங்கு பவுடர், எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
- சிறந்த முறையில் உயர்ந்த ரக சட்டங்களினால் படங்களுக்கு சட்டம், கண்ணாடி முதலியன போட்டுக் கொடுக்கப்படும். சட்டங்கள் மொத்தமாகவும் கிடைக்கும்.
- கட்டிடங்களுக்கு வேண்டிய கண்ணாடிகள் நேரில் வந்து கண்டிராக்ட் மூலம் அப்போதைக்கப்போது போட்டுக் கொடுக்கப்படும்.
- கோட், ஷர்ட், ஜாக்கட் முதலியவற்றிற்கு கலர் துணிகளில் மொத்தமாகவும் சில்லரையாகவும் உடனுக்குடன் பட்டன்கள் தயாரித்து கொடுக்கப்படும்.
- புதிய முறையில் தயாரிக்கப்பட்ட பெட்ரூம் லைட்டுகள் சில்லரையாகவும் மொத்தமாகவும் கிடைக்கும்.
- எங்கள் கடையில் எல்லாவிதமான கைத்தொழில் வேலைகளும், ரிப்பேர் வேலைகளும் செய்யப்படும்.

எல்லா விவரங்களுக்கும்
ஒருமுறை எங்கள் கடைக்கு விஜயம் செய்யவும்

# M. S. சேர்க்கான்

55, காசுக்கடை வீதி. ∴ கூடலூர், ப. நகர்

# தூய தாவீது சாரணர்ப் படை

சாரணர் இயக்கம் சிறுவர் இயக்கமாகும். அவ்வியக்கம் ஆடவர் பெண்டிர் ஆக இருபாலர்க்கும் உரியது எனினும் அஃது சிறுவர் சிறுமியர்களுக்கு சிறப்பாக முன்னேற்றம் அளிக்க வல்லது. அதில் பிள்ளைகள் சேர்ந்து பயின்று தூய அற ஒழுக்கங்களைப் பெறுகிறார்கள்; தங்களுக்குற்ற கடமைகளை செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றலை அடைகின்றனர்; நாட்டில் நல்லவர்களாக வாழ வகை காணுகிறார்கள். பல நூல்களைப் படித்தறியும் பிள்ளைகள் மேற்சொன்ன நலங்களையும் பெறக்கருதியே பள்ளிகளில் சாரணர் இயக்கத்தைப் போற்றி வளர்க்கின்றனர் போலும். அத்தகைய இயக்கம் நமது உயர்நிலைப்பள்ளியிலும் இவ்வாண்டு முதல் தொடங்கப் பெற்று நடந்தேறி வருகிறது.

இவ்வாண்டு ஜூலைத் திங்கள் முதலாம் நாள் நமது பள்ளியில் சாரணர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. பெற்றோர்களின் அனுமதி பெற்று பிள்ளைகளைச் சேர்த்து ஒரு சாரணர்ப் படை நிறுவப்பட்டது. அப்படைக்கு தூய தாவீது சாரணர்ப்படை எனப் பெயர் சூட்டப்பெற்றது. இருபத்தி நான்கு சாரணர்கள் கொண்ட அப்படையினர் நான்கு அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். தலைமை ஆசிரியர், திருவாளர், ஜி. எம். அருமைநாயகம் பி.எ., எல்.டி. அவர்கள் சாரணர்ப்படையின் தலைவராகவும் (Controller) ஆசிரியர்கள், திருவாளர் என். ஜே. ஞானையா, செ. இராமலிங்கம் ஆகியவர்கள் சாரண ஆசிரியர்களாகவும், செயலாற்றி வருகின்றனர்.

வெள்ளி தோறும் மாலை பள்ளி நேரத்திற்குப் பிறகு சாரணர்கள் ஒன்று கூடி சாரணர்ப் பயிற்சி பயின்று வருகின்றனர். மாதமொரு முறை வெளி இடங்களுக்குச் சென்று பாடி வாழ்க்கை மேற்கொள்ளுகின்றனர். தோணித்துறை, பெருமாள் ஏரிக்கரை முதலிய இயற்கைகாட்சிகள் செறிந்த இடங்களுக்குச் சென்று பாடி வாழ்க்கை நடத்தப்பட்டது. அதுபொழுது சாரணர்கள் ஆங்காங்கு பெற்ற அநுபவங்கள் பலவாகும். மாரிக்காலத்தை முன்னிட்டு பள்ளியின்கண்ணே தங்கி பாடி வாழ்க்கையில் ஈடுபட்டதும் உண்டு. அந்நேரங்களில் உடற்பயிற்சி ஆசிரியர் திருவாளர் எடி ஞானமுத்து அவர்கள் சாரணர்களுக்கு வேண்டியவற்றை போதித்தது போற்றற்குரியதாகும்.

15-7-53 அன்று பள்ளி நாள் கொண்டாடப் பட்டது. அது காலை பல நிகழ்ச்சிகளில் சாரணர் பங்கு பெற்றனர். அவர்கள் நடித்துக்காண்பித்த 'குள்ள நடனம்" அவண் குழுமி

யிருந்த அனைவர் உள்ளங்களையும் கவரத்தக்கதாய் அமைந்தது. மற்றெல்லா சமயங்களிலும் சாரண இயக்கத்திற்கு உறுதுணையாயிருக்கும் ஆசிரியர் திருவாளர். டி. தனராஜ் அவர்கள் அது சமயம் அளித்த பேருதவி என்றும் மறக்கற்பாலதன்று.

சாரணர் தங்கள் வாக்குறுதிக் கேற்ப தொண்டு பல புரிந்து வருகின்றனர். பள்ளிகளில் அவ்வப்போது நடைபெறும் கூட்டங்கள் செவ்வனே நடைபெறத் துணைபுரிகின்றனர்; பள்ளி பொது போட்டி விளையாட்டுத் தினத்தன்று ஒழுங்கு முறை வழுவாது கண்காணித்தனர்; மாசிமகத் திருவிழாவில் கடற்கரைக்குச் சென்று மக்களுக்குப் போக்கு வரவு வசதி அமைத்தனர்—காணுமற்போன சிறு பிள்ளைகளை கண்டுபிடித்தனர். மேலும் ஆங்கு தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பொருள்களைப் பாதுகாத்து வேண்டும்போது அளித்து உதவினர்.

இத்தகைய தூய தாவீது சாரணர் படையை. சென்னை மாகாண சாரணர் அமைப்பு ஆணையர் திரு இராஜகோபாலன் அவர்களும். தென்னுற்காடு மாவட்ட சாரண ஆணையர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், கல்வி அதிகாரி திரு. தீனதயாளு நாயுடு அவர்களும், கூடலூர் கருவூல அலுவலர் திரு. எம். எஸ். பாலையா அவர்களும், சென்னை அத்யட்சகர் உயர்திரு ரெவரண்ட் ஹாலிஸ்ஸும் அவர் தம் மனைவியாரும், பார்வையிட்டு மகிழ்வெய்தி தங்கள் ஆதரவையும் அளித்துள்ளனர்.


இடையே சாரணர் வாரம் கொண்டாடப்பட்டது. 7—10—53 அன்று மாலை சாரணர் பல சாரணீயப் பாட்டுகளை இசைத்துக்கொண்டு நகர் வலம் வந்தனர் அந்திப்பொழுதில் வட்டத்தீ அமைத்து சாரணர்க்குறிக்கோள் பொதிந்த கதைகள் பல நடித்துக் காண்பித்தனர், பெற்றோரும் ஏனையோரும் கூடியிருந்து பெரிதும் வியந்தனர்.

இருபத்தி நான்கு சாரணர்கள் முதல்படியாக "இளம் பாதர் பயிற்சி" பயின்று 13—2-54 ல் மாவட்ட சாரண ஆணையர் தலைமையில் கூடி., சாரணர் வாக்குறுதி அளித்து சாரணர்களாக ஆக்கப்பெற்றனர்.

இவ்வாறு தோற்றுவிக்கப் பெற்று வளர்ந்து வரும் தூய தாவீது சாரணர்ப் படை பெற்றோர் மற்ற ஆசிரியர்கள் ஒத்துழைப்பைப் பெற்று தன் கடமை தவருது பணி பலபுரிந்து சிறந்து ஓங்க அருள் சுரக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வாழ்க சாரணீயம்.

Printed at the Saraswathi Press, Tirupapuliyur
Editor: G. H. CLARENCE, B. A., L. T.,



F. III HINDUSTHANI PAREEKSHARTEES
March 1953

MADRAS
10 DEC 1955

# चांदनी रात में

(क. जयरामन, हिन्दी पंडित)

थका हुआ मन था, चाहता थोडी देर दिल बहलाना
बच्चों सहित गया बाग में; समय था अति सुहाना
छिटकी हुई स्निग्ध चाँदनी थी; तारों भरी थी रात
ले महक सुमन से बह रही थी मंद गति से बात
हिम बरसता चांद था, तप्तमन हुआ जिससे शीतल
शांति का राज; सपने का संसार, निस्तब्ध जगतीतल
आशा उठी सुप्त मन की -"काली घटाओं को चीरकर
गगन के झरोखे से हंसेगा धवल चंद्र खिलखिलकर
आह की आग बुझा आनंद की बरसाए बारिश
तडपते मन को शांत करे, उतारे बेचैनी का विष"
पर झांकते ही चांद का प्रकाश पडा बच्चों पर
उनकी दरिद्रता, नीरसता पर मेरी पडी नज़र
चौंक उठा, दिल दहला, सुप्त वेदना उठी जग
दुष्काल की रेखा लंबी सता रही थी अलग
बेचैन हुआ दिल बे-ताब था मूंदकर नयन
छिपाके अश्रु और आह, ढंक लिया निज वदन
हाए! चांद क्या अरमान ले आया, क्या तूने किया?
बुझाने के बजाय इस दिल की आग को जला दिया।

---

# सपना

( क. जयरामन, हिन्दी पंडित )

उठके गिरती हैं छिन्न-भिन्न होतीं
शांत न होतीं मन सागर की तरंगें ।
विकल हो उठता हूं मदमत्त गज सा
झूम-भटकती हैं दिल की उमंगें ॥

साथ देता साहस फिर भी हताश हूं
सांत्वना देता पर मानता नहीं दिल ।
निकट आ आकर कभी कभी
दूर हो जायाकरती है मन्जिल ॥

किससे कहूं, क्या हूं, बताए कोई
आशा उठ उठकर झुक जाती है ।
व्यथा मन की बताने किसी से
खोलूं मुंह तो कंठध्वनि रुक जाती है ॥

दर्दी दिल भी समझ न पाता
हाए ! औरों के दिल का तडपना ।
मन ज़रा-सा खुश हो जाता
किसी का देख देख मीठा सपना ॥

भुलाने का व्यथाओं को दिल की
सहारा एकमात्र है स्वप्नावस्था ।
स्वप्न-से जीवन के प्रतिपल
मन कभी रो लेता, कभी हंसता ॥

## सच्चा धर्म

(क. जयरामन, हिन्दी पंडित)

छोडो छोडो ममता, प्रीति और द्वेष
काम, क्रोध, लोभ का चिह्न न रहे शेष ।
उत्थान करो आत्मा का, दैवीकृत्य निभाओ
दुर्गुण तज दृढतर परब्रह्म को मनाओ ।
लाओ संयम में इंद्रियाणि तथा मन
अविचल अटल हो प्रभु पर ही लगन ।
जला डालो इच्छा, याचना, मेरापन
मान लो गुरु-वाणी, करो वेदाध्ययन ।
अहिंसा का करो अभ्यास, सत्य, प्रेम का
"मैं हूं कौन" उत्तर ढूंढो इस प्रश्न का ।
जान लो निज को, जाओ माया से मुक्त हो
सच्चा धर्म यही है समझो औ समझा दो ॥

## गीतासार

(त. तिरुनावुक्करसु, B.A.L.T.)

1. जो जो काम करते, जो खाते, जिसकी इच्छा करते, जो दान देते और जो साधना करते हो उन सबको श्री कृष्ण के अर्पण कर दो ।

2. जो ईश्वर को सब कहीं सारी जन्तुओं में देखता और सारी सृष्टियों को ईश्वर ही में देख पाता उसे हमेशा ईश्वर का सहारा मिलता रहता है ।

3. जो सुख में स्पृहा एवं गर्व रहित होकर, दुख में किञ्चिदपि विचलित न होता है तथा इष्ट या अनिष्ट वस्तु पाकर भी जो शांत एवं गंभीर रहता है उसी की प्रज्ञा प्रतिष्ठित है।

4. प्रभु का ध्यान करो, उसी का भक्त बनो, उसी की इच्छा करो, उसी को नमस्कार करो, उसी में अपनी आत्मा लगाओ तो निश्चय ही तुम उसे प्राप्त कर सकते हो।

5. तुम्हारा अधिकार केवल कार्य पर ही है, न कि उसके फल पर। अतः फल की प्रतीक्षा न करके कार्य करते जाओ।

6. ईश्वर अपनी सभी सृष्टियों के साथ एक सा व्यवहार करता है। उसे न किसी से प्रेम, न द्वेष। जो यह जान पाता है वह अवश्य ईश्वर को पाने योग्य बन जाता है।

7. चाहे अपने धर्म में अकीर्ति भी क्यों न हो उसे किसी भी प्रकार न छोडना चाहिये। अपने धर्म में मर जाना भी बेहतर है परन्तु परधर्म भयानक है।

8. अपने सभी धर्मों को तजकर केवल उसी प्रभु की शरण में जाओ। वह तुम्हारी सभी पापों से रक्षा करेगा, ज़रा भी चिन्ता न करो।

"बोलो राम, करो काम"

---

## रामायण की शिक्षा

(क. वेणुगोपाल, V Form B)

रामायण एक ऐसा अध्यात्मिक ग्रन्थ है जिसका और कोई भी ग्रन्थ किसी प्रकार का मुकाबला भी न कर सकता। उस अनमोल सूर्य के प्रकाश में अनगिनत उपदेश की किरणें निहित हैं।

(1) अपने पिता के वचन का पालन करने और उनको सत्यवादी साबित करने के लिए राम को वन में कितने कष्ट उठाने पडे? इससे हमें यह

सीखना चाहिए कि चाहे जो भी मुसीबत आये, अपने पितृवचन का पालन अवश्य करना चाहिये।

(2) सीता जी ने राम के वन जाने की बात सुनते ही खुद भी उनके पीछे वन जाने की ठान ली इसलिए कि उनके विचार में जहां पति हैं वही स्वर्ग है। इसी उदाहरण का हर एक भारतीय नारी को अनुकरण करना चाहिए।

(3) लक्ष्मण ने लाख कष्ट सहे परंतु अपने भ्राता का पीछा न छोडा? क्यों? इसलिए न कि भ्राता पिता के समान है? आज भाई-भाई का झगडा होने वाले इस ज़माने में हर एक युवक को सुशिक्षा मिलती है कि भाई पन का भाव कभी न तजना चाहिए।

(4) शबरी ने रामचंद्रजी को अपने चखाये जूठे बेर खिलाये क्यों? प्रेमविभोर होकर। प्रेम के आगे वह सब कुछ भूल गयी। भगवत्प्रेम कितना अमूल्य वस्तु है? उसे हर मनुष्य को अपने जन्म के साफल्य के लिए अपनाना चाहिये।

(5) जटायु जाति के पक्षि थे मगर उन्होंने सीता जी की रक्षा के हित क्या तो न उठा रखा, अपने जीवन का भी त्याग कर दिया। भारत की भाग्य-लक्ष्मी सीता जी के हित अपने जीवन की भी परवाह न की। उनसे यह सीखने का विषय है कि प्रभु की सेवा ही उत्तम मार्ग है चाहे उसमें हज़ार मुश्किलों का सामना क्यों न करना पडे।

---

## कल्पतरु

(श्री जि. गोपालन, Art Master)

देशान्तर में भ्रमण करते-करते एक पथिक ने किसी मरुस्थल के समीप अपने को पाया। उसे उस दिन चिलचिलाती धूप में अति दूर भटकना पडा। शरीर-भर में श्रमजल की धारा प्रवाहित हो रही थी। अति थकित हो वह अनतिदूर पर एक वृक्ष को देख आतुरता से उसकी सुखद शीतल छाया के

आश्रय में जा पहुंचा अपना श्रम मिटाने की लालसा से । "काश! अभी कोई मृदु शय्या पास होती तो कितनी आनन्द की निद्रा लेता!" इतना-सा विचार उसके मन में उगने-मिटने की देर भी न थी कि उसने पास एक कोमल शय्या को पडे देखा। यकायक उसका वहां अस्तित्व कैसे हुआ-यह हल न कर सका, थका तो वह था ही। बेचारे को क्या पता कि वह कल्पतरु के ही तले बैठा हुआ है? उस शय्या पर उसकी तप्त काया के पडते ही उसके विचारपट में और एक आकांक्षा का उदय हुआ—"काश, यदि इस उत्तप्त एवं पीडित शरीर के हस्त व पाद को दबाने के लिए दो तीन तरुणी रमणियां होतीं!" उसकी विचारमग्नता भङ्ग भी न हुई कि दो गोरी तरुण युवतियां उसके हाथ-पैर दबा रहे थे। तब उसे ऐसा लगा मानों वह स्वर्ग के इन्द्रासन पर विराजमान हो।

बदन के दर्द के मिटते मिटते उसके पेट में क्षुधाग्नि प्रज्वलित हुई। विचार यूं दौडाया—"क्या आश्चर्य! जो कामनाएं की वे तुरंत पूर्ण हो गयीं। इतने पर यदि मैं अब भोजन की भी चाह प्रकट करूं तो वह भी क्यों न मिले?" दूसरे क्षण उसने कल्पतरु के दिये सुरुचिपूर्ण नाना प्रकार के खाद्य पदार्थ उडाये पेट भर। भोजन के उपरान्त उसने तृप्त एवं थकित हो शय्या का स्पर्श किया। अपनी सभी इच्छाओं को पूरी होते पाकर वह उनपर विचार करते करते विश्राम की गहरी निद्रा में डूब गया। तत्काल भयभीत उसके अन्तर से एक ध्वनि फूट पडी—"अचानक अभी एक व्याघ्र आ जाय तो........" उस ध्वनि को गुंजायमान करते हुए आ निकला कहीं से एक वनव्याघ्र जिसने उस बेचारे पथिक से अपनी क्षुधा मिटायी।

उक्त प्रकार ही संसारी सभी जन आशापाश से नष्ट हो जाते हैं। तुम भी यदि अपने ध्यानावस्था के काल में धन, यश तथा अन्य माया की वस्तुओं की अपेक्षा करोगे तो उनमें कुछ तो पा सकते हो। कैसे? जो जो चाहते हो उन सबको प्रदान करनेवाले कल्पतरु के समान हैं परमात्मा। इच्छाओं को तृप्त करते समय तुम्हारे दिल में "व्याघ्र यदि आ जाय" ऐसी भावना प्रेरित

अवश्य होगी। वह व्याघ्र और कोई नहीं—केवल रोग, व्यथा, देहावसान, निर्धनता एवं अकीर्ति। अतः ध्यान, भक्ति, जप, धर्माचारशीलता आदि उपायों से अपने मन को निर्मल करते आओ तो धीरे धीरे सांसारिक आशापाशों से छूट सकोगे।

---

## रामराज्य में

(ए. सुब्बुलक्ष्मी, III c)

पतियों की मृत्यु पर स्त्रियों के मातम का रोना नहीं। खूनी जानवर व जहरीले कीडे-मकोडों का कहीं पता न था। बीमारी का नामो-निशान तक नहीं।

लूट न थी, चोरी न थी। किसी ने किसी का बिगाडा तक न था। किसी को कोई कष्ट या नुकसान न हुआ था। बच्चों के मरने पर बूढों या वयोधिकों का उनकी दाहक्रिया करना कभी न हुआ था।

सब कहीं प्रसन्नता। हर एक धर्म के, सत्य के पथ पर गुजरता था। कोई भी औरों की बुराई न चाहता था।

जन दीर्घायु से संपन्न थे। सबको भरपूर पुत्रधन प्राप्त था। चिन्ता, व्याधि से रहित सब निश्चिन्त व बलवान थे। सब कहीं राम नाम, सब कहीं रामगाथा।

घने पत्रों से झडित, फूलों से सुसज्जित, तथा फलों से लदे हुए वृक्ष लहलहा उठे। उचित ऋतुओं में पानी खूब बरसा। दक्षिणी वात अति आनन्दोन्मत्त भाव से लहराए थी। समस्त वर्णवाले वासना रहित होकर अपने अपने कर्तव्य निभाकर कर्म-कृत्यों की कुशलता में ही फूले रहते थे। लोग न्याय व सत्य के पथ पर गुजरते थे। असत्य बोलनेवाले एक मनुष्य को भी वहां पाना अंजीरपुष्प-सा था। धर्माचरण में व्यस्त सारे लोग हृष्ट-पुष्ट तथा सुन्दर दीख पडते थे। उनका तेज देखते ही बने !

(वाल्मीकी रामायण के आधार पर)

---

# हिन्दी

(एस. वेंकटेशन, IV A)

सन् 1950 जनवरी से भारत एक जनतन्त्र देश हो गया है। हर एक देश के लिए एक राष्ट्रभाषा की बडी आवश्यकता है। हिन्दी ही भारत के अधिक लोगों से बोली जाती है। इसलिए उसी को राष्ट्रभाषा का पद मिला है। हर एक भारतीय को हिन्दी सीखनी चाहिये। हिन्दी सीखने से हमारी अपनी मातृभाषा का ज्ञान कभी नहीं मिट या घट जायगा। हिन्दी एक आसान भाषा है और उसमें अच्छी अच्छी पुस्तकें हैं। हिन्दी के बडे कवि सूरदास, तुलसीदास और कबीरदास थे।

DEC 1958